Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 326

ஞாயிற்றுக்கிழமை
19 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## வங்காள விரிகுடாவில் விரைவில் தாழமுக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 19
வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 23ஆம் திகதி உருவாகும் என்று கணிக்கப்பட்ட தாழமுக்கம், இருநாள்கள் முன்னதாக நாளைமறுதினம் தோற்றம்பெறும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்

14

13ஆவது திருத்தத்தில் உள்ள

# மாகாணத் தேர்தலை நடத்துமாறு முன்னணியும்தான் கோருகிறது!

### கஜேந்திரகுமார் எம்.பி.யின் குற்றச்சாட்டுக்கு ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி பதில்

வவுனியா, ஒக்ரோபர் 19

அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே நாம் கோருகின்றோம். 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கோருகின்றது – இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாருக்கு பதில் வழங்கியுள்ளார் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.



14



175 ஆண்டுகள் நிறைவு

## யாழ். போதனாவுக்கு சிறப்புத் தபால்தலை

விரிவு பக்கம்:- 14

முன்னாள் யாழ்.மாவட்டச் செயலர்

## கணபதிப்பிள்ளை மகேசன் சேவையில் இருந்து ஓய்வு

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ்ப்பாணம் மாவட்டத்தின், முன்னாள் மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.
யாழ்.மாவட்டச்

14



## அத்துமீறிய மீன்பிடியைத் தடுப்பதில் முழுமூச்சாக ஈடுபடுகிறதாம் கடற்படை

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19
இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடுத்து நிறுத்துவதில், கடற்படையினர் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றனர் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

14

இசைத்துறையில்

## யாழ்.பூர்வீகச் சிறுவன் கின்னஸ் சாதனை!



கொழும்பு, ஒக். 19
யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டு, டுபாயில் வசித்துவரும் தமிழ்ச் சிறுவனான சிவாங்க் வருண் இசைத்துறையில் கின்னஸ்

14

### முச்சந்தி முரளி

'வேலிக்கு ஓணான் சாட்சி என்டமாதிரி நேவிக்கு அமைச்சர் சாட்சியாம்'

சங்குப்பிட்டியில் கொலையுண்ட பெண்ணுக்கு

## நீதிகோரிப் போராட நீதிமன்றம் தடை!

யாழ்ப்பாணம், ஒக். 19
சங்குப்பிட்டிப் பாலத்தில் சடலமாக மீட்கப்பட்ட சுரேஷ்குமார் குலதீபா என்ற குடும்பப் பெண்ணின் படுகொலைக்கு நீதிகோரி, காரைநகர் பிரதேச சபைக்கு முன்பாக இன்று

14

## சஞ்சீவி

A-
பிட்ச் ரேட்டிங்
(LKA)/Stable
பிட்ச் ரேட்டிங் லங்கா லிமிடட்
வலுவான நிலையான பாதுகாப்பான

37 மாதங்கள்
சிரேஷ்ட பிரஜைகளுக்கு
முதிர்வின்போது
12.5% (வ.வ.வீ)
(ச.வ.வீ 11.15%)
நிலையான வைப்பு முதலீடு ரூ. 2 மில்லியன் வரை

01 மாதம்
7.5% (வ.வ.வீ)
(ச.வ.வீ 7.76%)

06 மாதங்கள்
8.5% (வ.வ.வீ)
(ச.வ.வீ 8.68%)

011 237 5385

inquiries@abansfinance.lk www.abansfinance.lk

Abans Finance

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 18.10.2025 | 4228 | O | 23 29 37 78 | விசேட எழுத்து O |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 18.10.2025 | 1295 | | 15 27 34 54 | வெற்றி இலக்கினம் கடகம் |
| NLB ஜய | 18.10.2025 | 0254 | H | 4 8 6 7 | |
| மெகா பவர் | 18.10.2025 | 2334 | J | 11 18 28 70 | சுப்பர் இலக்கம் 21 |
| மஹஜன சம்பத | 18.10.2025 | 5986 | N | 3 6 7 9 3 0 | |
| தன நிதானய | 18.10.2025 | 2015 | G | 14 37 52 81 | விசேட எழுத்து G |
| அத சம்பத | 18.10.2025 | 0561 | N | 7 9 3 0 | |
| சுப தவசக் | 18.10.2025 | 0102 | | 18 30 33 | வெற்றி இலக்கினம் துலாம் |

## போதைப்பொருளுடன் கைதானார் இளைஞர்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் - சிறுப்பிட்டி மடத்தடி பகுதியில் ஐஸ் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-23)

**பிளம்பர் தேவை**

யாழ்ப்பாணத்தில் நாட்கூலி அடிப்படையில் பிளம்பிங் வேலை செய்யக்கூடிய அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை

தொடர்பு: 076 653 3814

(CR 46139) E

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 18.10.2025 | சனிக்கிழமை | 0694 | P | 5 7 7 5 2 9 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 18.10.2025 | சனிக்கிழமை | 2960 | D | 18 23 27 76 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 18.10.2025 | சனிக்கிழமை | Z | 27 36 44 62 | 5021 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 18.10.2025 | சனிக்கிழமை | 0794 | 27 36 42 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 18.10.2025 | சனிக்கிழமை | ரிஷபம் | 44 52 57 61 | 4672 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 18.10.2025 | சனிக்கிழமை | R | 18 | 26 27 29 68 | 2136 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 18.10.2025 | சனிக்கிழமை | Q | 13 35 68 71 | 2786 |

**JAYODA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 15.10.2025 | புதன்கிழமை | I | 14 16 19 47 | 2170 |

# உடனடிக் கடன்கள் வாங்கி சிக்கலில் சிக்கவேண்டாம்

## பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

**கொழும்பு, ஒக்.18**

**இணையத்தளம் மற்றும் கைபேசிகள்மூலம் வழங்கப்படும் உடனடிக் கடன்கள் தொடர்பாக பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

இணையத்தளம் மற்றும் கைபேசிகள்மூலம் கடன் பெறுபவர்கள் ஏமாற்றும் கடன் திட்டங்களில் சிக்கி அதிக நெருக்கடியைச் சந்திக்கின்றனர் என்ற முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக இலங்கைப் பொலிஸ் திணைக்களம், மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதிநிறுவனங்கள்மேற்பார்வைத் துறையுடன் இணைந்து கூட்டு விசாரணை மேற்கொண்டது. அந்த விசாரணையில் டிஜிற்றல் தளங்கள்மூலம் கடன் வழங்கும் பல நிறுவனங்கள் மத்திய வங்கியால் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இத்தகைய நிறுவனங்களை உரிய ஒழுங்குமுறை மேற்பார்வையின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் டிஜிற்றல் மற்றும் கைபேசித் தளங்களில் ஏராளமான நிறுவனங்கள் கடன்களை வழங்குகின்றன. எந்தவொரு பிணையும் தேவையில்லை என்றும், சில சமயம் வேண்டு கோள் இல்லாத அழைப்புகள் மூலம் உடனடிக் கடன்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆயினும் அவைஉயர்வட்டிவீதத்திலேயே கடன்களை வழங்குகின்றன. பல தனிநபர்கள் வட்டி விகிதங்கள் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாமல் கடன்களைப் பெற்று, பின்னர் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்திக்கின்றனர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான நிதி நடவடிக்கைகள் தொடர்பாக முறைப்பாடளிக்கபொதுமக்கள் தங்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தை அணுகலாம் அல்லது மத்திய வங்கியின் அதிகாரபூர்வ இணையத்தளத்தைப் பார்வையிடலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# குற்றவாளிகள் மீதே சட்டம் பாய்கின்றது!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19

சட்டம் தற்போது உரியவகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய தரப்புகளே இதனை அரசியல் பழிவாங்கலென விமர்சித்துவருகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றவாளிகள், பாதாளக்குழுவினர், போதைப்பொருள் வியாபாரிகள் ஆகியோரைக் கைது செய்த பின்னர் அவர்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையிலேயே கைதுகள் இடம்பெறுகின்றன.

இது அரசியல் பழிவாங்கல் அல்ல. அவ்வாறு கூறி சட்டம் அமுலாவதைத் தடுக்கமுடியாது. எவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லை. சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கை இடம்பெறுகின்றது - என்றார். (ச-44)



# 18 இலட்சம் கடந்தது சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, ஒக்.19

2025 ஆம் ஆண்டு இதுவரை இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 18 இலட்சத்தைக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 15 ஆம் திகதி வரையான சுற்றுலாப்பயணிகள் தொடர்பான புள்ளிவிவரங்களை வெளியிட்டு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

அந்த புள்ளிவிபரங்களின்படி, இந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் மட்டும் 75,657 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் எம்.பி.க்கள் களம்

கொழும்பு, ஒக்.19

அடுத்த வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் 30 க்கும் மேற்பட்ட முன்னாள் எம்.பி.க்கள் போட்டியிடவுள்ளனர் என்று நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தேசிய மக்கள் சக்தி அலையை சமாளித்து, தமது கட்சிகளுக்குரிய வாக்கு வங்கியை அதிகரித்துக்கொள்ளும் நோக்கிலும், மக்கள் மத்தியில் தமக்குள்ள ஆதரவை நாடிபிடித்து பார்க்கும்வகையிலுமே அவர்கள் இவ்வாறு களமிறங்கவுள்ளனர்.




நவீன் திஸாநாயக்க, உதய கம்மன்பில, ஹிருணிக்கா பிரேமசந்திர, முஷாரப், மருதபாண்டி ராமேஸ்வரன், வடிவேல் சுரேஷ், யோகேஸ்வரன் உட்பட மேலும் பல நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் போட்டியிடுவது பற்றி ஆராய்ந்துவருகின்றனர் என்றும் தெரியவருகின்றது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண ஆட்சி அதிகாரங்களை உறுதிப்படுத்த உந்துதலளியுங்கள்



## வடக்கு- கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.19**
**தமிழ்பேசும் மக்கள் மத்தியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் மாகாணசபைத் தேர்தலை அரசு நடத்துவதற்கு வலியுறுத்தவேண்டும். மாகாண ஆட்சிக்கான அதிகாரங்களை உறுதிப்படுத்தவேண்டும் என்று இணைந்த வடக்குக் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.**

அவர் மேலும் ஊடகங்களுக்குக் தெரிவிக்கையில்,
ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளோடு நடத்திய கலந்துரையாடலின் போது மாகாணசபைகளுக்கான தேர்தலை எந்தவகையான காரணமும் சொல்லிக் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடத்துவதற்கு வலியுறுத்தவேண்டும் எனக் கோரினேன்.
தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது இலங்கை மக்கள் அனைவருடைய கோரிக்கையே. நடத்தப்படவேண்டிய தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல் இருப்பது அரசியல் யாப்புக்கும் விரோதமானது.
அதிகாரத்தில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தியினர் காரணங்கள் எதையும் கூறாமல் தேர்தல்களை நடத்தவேண்டும்.
மாகாண ஆட்சிக்கான அதிகாரங்களை முழுமையாகவும் முறையாகவும் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தவேண்டும்- என்றார். (ச-26)



# 1000 பனம் விதைகள் வேலணையில் நடல்

யாழ்ப்பாணம், ஒக். 19
தீவகத்தின் அடையாளத்தைப் பாதுகாத்து பசுமையை உருவாக்கவும், பனைமரங்களின் பாதுகாப்பை உறுதி செய்து நன்னீர் வளங்களைப் பாதுகாக்கவும் வேலணைப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான பனம் விதைகள் நடப்பட்டன. குறித்த திட்டம், நேற்றுமுன்தினம் வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட அல்லைப்பிட்டிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.
அல்லையூர் இளைஞர்களின் ஏற்பாட்டில் வேலணைப் பிரதேச செயலகம் மற்றும் வேலணைப் பிரதேசசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில், பிரதேசசபையின் உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டு பனம் விதைகளை நட்டனர். (ச-27)

# ஆழ்துளைக் கிணறுகளுக்கு அனுமதிபெறுதல் கட்டாயம்



## வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை அறிவிப்பு

வுனியா, ஒக்.19
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை எல்லைக்குள் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கும்போது பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சபையின் தவிசாளர் பா. பாலேந்திரன் தெரிவித்துள்ளார்.
சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நிமித்தம் ஆழ்துளைக்கிணறுகள் அமைப்பதைத் தடைசெய்வது தொடர்பாக கடந்த சபை அமர்வில் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. சில காணிகளில் பாறைகள் உள்ளமையால் சாதாரண கிணறுகள் அமைக்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. சில பகுதிகளில் 200 அடிவரை ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கின்றனர். எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்குடன் இனிவரும் காலங்களில் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதாயின் பிரதேச சபையின் அனுமதியைப் பெற வேண்டும் எனத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அறிவிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது -என்றார். (ச-110)

# சுகாதார விதிமீறல்கள்; 96,000 ரூபா தண்டம்!

யாழ்ப்பாணம், ஒக்.19
பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாத பல்பொருள் வாணிபம் ஒன்றுக்கும் இரண்டு உணவகங்களுக்கும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் 96 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குழுவால் அண்மையில் நகரிலுள்ள உணவகங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.
இதன்போது காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தமை, நுகர்வோருக்குப் பழுதடைந்த உணவை விநியோகம் செய்தமை, உணவகத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை வெளிச்சுற்றாடலுக்கு அப்புறப்படுத்தியமை என்பன கண்டறியப்பட்டு பல்பொருள் வாணிபம் மற்றும் இரு உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே முறையே 60, 000 ரூபா, 10, 000 ரூபா, 26, 000 ரூபா என மொத்தமாக 96,000 ரூபா தண்டப்பணம் நீதிவானால் விதிக்கப்பட்டது. (ச-100)

# கஜமுத்துகளுடன் ஒருவர் கைது



கொழும்பு, ஒக்.19
30 கோடி ரூபாவுக்கு அதிக மதிப்புள்ள கஜமுத்துகளுடன் மஹியங்கனையில் சந்தேகநபர் ஒருவரை வனவிலங்கு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 30 கஜமுத்துகள், சிறுத்தையின் தோலின் பகுதிகள், யானைத் தந்தங்கள், சிறுத்தையின் எண்ணெய், கருங்காலி மரப் பகுதிகள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, விலங்குகளைப் பிடிக்கப் பயன்படுத்தப்படும் பொறிகள் ஆகியவற்றையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (ச-இ)

# சமூகப் பாதுகாப்பு விருது யாழ்.மாவட்டம் முதலிடம்

திருகோணமலை, ஒக்.19
சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் பயனாளிகள் இணைப்பின் அடிப்படையிலும், பணச்சேகரிப்பின் அடிப்படையிலும் யாழ்.மாவட்டம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அதற்கான விருதினை யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் பெற்றுக்கொண்டார்.
இந்த நிகழ்வு இலங்கை சமூகப் பாதுகாப்புச்சபையின் ஏற்பாட்டில் திருகோணமலை தனியார் ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அதன்படி இந்த விருது வழங்கும் நிகழ்வில் பணச்சேகரிப்பின் அடிப்படையில் தேசியமட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் முறையே பருத்தித்துறை, நல்லூர், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகங்கள் பெற்றுக்கொண்டன.
விருதுகளை முறையே பருத்தித்துறை முன்னாள் பிரதேச செயலாளரும், தற்போதைய வடக்கு ஆளுநரின் செயலாளருமான எஸ்.சத்தியசீலன், நல்லூர்ப் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார், சண்டிலிப்பாய் முன்னாள் பிரதேச செயலாளரும், தற்போதைய மத்திய மாகாண செயலகத்தின் செயலாளருமான திருமதி சுபாஜினி மதியழகன் ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். கோப்பாய், உடுவில், கரவெட்டி, சாவகச்சேரி, வேலணை, தெல்லிப்பழை, சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களும் தேசிய விருதுக்கான தகுதியினைப் பெற்றுத் தேசிய விருதுக்குத் தெரிவாகியிருந்தன. இந்த விருதுகளை மேற்படிப் பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் பெற்றுக்கொண்டனர். (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர், முதியோர்தின நிகழ்வு

புதிய சோனகதெரு ஜே/88 முதியோர் சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் சர்வ தேச சிறுவர் முதியோர்தின விழா ஆறு கால்மடம் அறிவொளி கலையரங்கத் தில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பி . ப . 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் நடராஜா சர்வேஸ்வரன் பங்கேற்கவுள்ளார். (41)

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

கட்டிடத்திற்கு தேவையான சகல இரசாயனப் பொருட்கள் (நீர்க்கசிவை தடுப்பது உட்பட) 10 வருட உத்தரவாதத் துடன் நீர்க்கசிவை சீர்செய்து தருவோம்.
கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
தரம் குறைந்த போலிகளைக் கண்டு ஏமாறாதிர்கள்
Flatinum Flex சிலப்புகளுக்கு
North and East Engineering
Synroof வெளிப்புறச் சுவர்களுக்கு
077 524 4177, 077 232 3000

# 22,950 தொன் உப்பு சுங்கத்தில் தேக்கம்

கொழும்பு, ஒக்.19
நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 22,950 மெற்றிக்தொன் உப்பை இலங்கை சுங்கம் தடுத்து வைத்துள்ளதாக சுங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 910 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள இந்த உப்புத் தொகை, தேசிய தரநிலைக ளுக்கு ஏற்ப இல்லாததுடன், அரசாங்கம் நிர்ணயித்த இறக்கு மதிக் காலம் நிறைவடைந்த பின்னர் நாட்டுக்குக் கொண்டுவ ரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் நாட் டுக்குள் கொண்டுவரப்பட்ட மிகப்பெரிய உப்புத் தொகையில் இதுவும் ஒன்றாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

# சிரமதானம்

யாழ்ப்பாணம், ஒக்.19
'கிளீன் சிறீலங்கா' தேசிய நிகழ்ச்சித்திட்டத் தின்கீழ் "வெள்ளம் வருமுன் காப்போம்" எனும் தொனிப் பொருளில் கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகள் கோவிலுக்கு எதிரே அமைந்துள்ள வெள்ளவாய்க்கால் பகுதி இன்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளது.
வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை உறுப்பி னர் சுகிர்தரூபன் சிவசுப்பிரமணியத்தின் ஏற்பாட்டிலும், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் ஒத்துழைப்பிலும் இந்தச் சிரமதா னம் முன்னெடுக்கப்படவுள்ளது.
சிரமதானப் பணியில் இளைஞர் கழகத்தி னர், விளையாட்டுக் கழகத்தினர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், ஆலய நிர்வாகத் தினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளது. (ச-66)

## LABORATORY EQUIPMENT COMPANY PVT LTD

எங்கள் குழுவுடன் இணையுங்கள்...

- We're looking for young, motivated individuals to join our canvassing and marketing team for Science Teaching Equipment

**Your Role:**

- Demonstrate and promote Science & Engineering Teaching Equipment to colleges, School and Universities

**What We Offer:**

- Training in product knowledge and sales techniques
- Attractive commissions and performance bonuses
- Opportunities for career growth in sales
- Age 18 - 30

E- mail your CV - labequsales@sltnet.lk
Call - 0703789106

## காணி விற்பனைக்கு



பளை நகரில் புலோப்பளையில் உள்ள காணியொன்றும் வயல்காணியும் விற்பனைக்கு உண்டு.
076 564 7848

## மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு சிறந்த நிலம் விற்பனைக்கு உண்டு

தொடர்பு 0776 544 540

## காணி விற்பனைக்கு

மிகவும் அழகிய இயற்கை சூழலில் உள்ள 90 பேர்ச் (ஒன்பது பரப்பு) காணி நிலம் விற்பனைக்கு. மானிப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் உடுவிலிற்கு அருகாமையில் தூய்மையான குடிநீர் மற்றும் சிறந்த போக்குவரத்து சாலைகளுடன் விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு: 076 070 1988




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள்வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**இடபம்:** காலையில் சற்றுச்சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன்– மனைவிக்கிடை யே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சி களைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது.

**கடகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிவரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்கள்மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சிதரும்.

**துலாம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர் களால் ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்** : தந்தைவழி உறவுகளிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவு களால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் வீட் டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர் களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர் பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச்செல்லவும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். திடீர்ச்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

**மீனம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறை வேற்றுவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். கணவன் – மனைவிக்கிடையே மனஸ்தா பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

# இளமாணிப்பட்டக் கற்கை விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.19

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தி னால் நடத்தப்படும் மென்பொருள் பொறியியல் இளமாணிப்பட்டக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படி வங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவே சித்து எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பதாரி 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தினால் எதிர்வரும் 2026.01.4ஆம் திகதி நடத்தப்பட விருக்கும் தேர்வுப் பரீட்சையிலும் சித்தி யடைந்திருத்தல் கட்டாயமானது.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3374 எனுந் தொலைபேசி இலக்கத்தி னூடாகவும் அல்லது கொக்குவில் பிற வுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்திலும் தொடர்புகொள்ளமுடியும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-41)

கோப்பாய் பிரதேச செயலகம் நடத்திய சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுத்திற னாளிகள் தின நிகழ்வு செயலக மாநாட்டு மண்டபத் தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது. பிரதேச செயலாளர் ஈ.தயா ரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் யாழ். மேலதிக மாவட்டச் செயலர் (காணி) பாலசுந்தரம் ஜெயகரன் முதன் மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(ச-41-17)

# வாழ்வாதார உதவிகள் கிளிநொச்சியில் வழங்கல்


கிளிநொச்சி, ஒக்.19

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 56 பேருக்கு 5 மில்லியன் ரூபா பெறுமதியான வாழ் வாதார உதவிகள் கிளிநொச்சி கூட்டுறவுத் திணைக்கள மண்டபத்தில் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்று றையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற் றும் வர்த்தகவாணிபமும் அமைச்சின் நிதியு தவியில் அவை கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இரா. சந்திர சேகர் கலந்துகொண்டு அவற்றை வழங்கிவைத் தார். (ச-25, 113)





# மீனவர்களை வலுப்படுத்தல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னார், ஒக்.19

சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளம் மீனவர்களை வலுப்படுத்துதல் மற் றும் சட்டவிரோத மீன்பிடி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான கருத்தமர்வு மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கி ழமை நடைபெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்ட கடற்றொழில் அலுவலர் இ.றொபின் ஜூட் வளவாளராகக் கலந்துகொண்டு கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் சார்ந்த சட்டங்கள், மீன்பிடிக்குப் பயன்படுத்தத் தடைசெய்யப் பட்ட உபகரணங்கள், அனுமதியின்றி சங்குகள் வைத் திருத்தல், பிடிப்பதற்குத் தடைசெய்யப்பட்ட கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் மீன்பிடிக்கான அனுமதிப்பத்தி ரங்கள் தொடர்பில் இளம் மீனவர்களுக்குத் தெளிவுப் படுத்தினார். (ச-41,56)



# முதியோர் நிலையம் தருமபுரத்தில் திறப்பு

கிளிநொச்சி, ஒக்.19

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் அன்னை நிலா முதி யோர் பகல் பராமரிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் சுமார் 18 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு முதியோர்களின் பயன்பாட்டுக்காகக் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன், தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திஸாநாயக்க மற்றும் இராணுவத்தினர், கிராம அலுவ லர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண் டனர். (ச-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# கோடரிக் காம்புகளின் வேரறுப்பு..!

மன்னார் - திருக்கேதீச்சரவளைவு உடைக்கப்பட்ட விடயத்தில், பொலிஸ்மா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. திருக்கேதீச்சர வளைவு உடைக்கப்பட்டமை இந்த ஆண்டிலோ அல்லது கடந்த ஆண்டிலோ அல்ல. 2019ஆம் ஆண்டில்தான் மதத்தின் பெயரால் இந்தப் பாரதூரமான சம்பவம் நடந்தது. பாதிக்கப்பட்ட தரப்புகள் பொலிஸாரிடம் முறையிட்டு, நீதியான விசாரணைகோரி ஏறி இறங்கி, அண்ணளவாக ஆறு வருடங்கள் கடந்த பிற்பாடுதான், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. கடந்த அரசாங்கங்களின் காலத்தில் ஏற்பட்ட இந்தத் தாமதத்தை எண்ணி உண்மையில் அவை வெட்கித் தலைகுனியவேண்டும்.

ஒரு குற்றத்தில் அல்லது பதற்றத்துக்குரிய ஒரு விடயத்தில், நீதி தாமதமாகும் போது, அது அமைதியின்மைக்கும் - சமூக வன்முறைகளுக்கும் - இன மற்றும் மதப் பதற்றத்துக்கும் வித்திடும். இந்தக் கோட்பாட்டில் ஈழத்தமிழர்கள் தெளிந்த அறிவுடையவர்கள் என்று கூறுவதைவிடவும் பட்டுணர்ந்தவர்கள் எனக் குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும். ஆதலால், திருக்கேதீச்சர வளைவு உடைக்கப்பட்ட விடயத்தில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதி கவனிக்கப்பட வேண்டியது. இந்த நீண்ட தாமதம் ஏன்? எதற்கு? இதன் பின்னணியில் ஏதேனும் சக்திகள் உள்ளனவா? என்பது தொடர்பிலும் தீர்க்கமாக விசாரிக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இருக்கவே செய்கின்றது. சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக மூன்று தசாப்தகால ஆயுதப் போராட்டத்தைக் கண்ட மண் இது. 70 ஆண்டுகளாக அதே ஆக்கிரமிப்புக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்தையும் நடத்திவருகின்றோம். ஆனால், ஆக்கிரமிப்பும் அடாத்தான செயற்பாடுகளும் சிங்கள - பௌத்த மேலாதிக்க மனோநிலைக்கு அப்பாற்பட்டும் உள்ளன என்று திருக்கேதீச்சர வளைவு உடைப்புச் சம்பவம் அன்று கட்டியம் சொன்னது. எந்தவொரு போராட்டத்தையும் - மக்கள் கூட்டத்தையும் 'கோடரிக் காம்புகள்' நலினப்படுத்தும் என்ற செய்தியையும் அது பறைசாற்றியது. எனவே, இந்த விடயத்தில் தீர்க்கமான விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும்.

தமக்குள் ஒற்றுமையில்லாத, எந்தவொரு இனத்தாலும் விடுதலை வேட்கையை அடைந்துவிடமுடியாது. இனம், மதம், மொழி, இறை நம்பிக்கை என்பவை இனக் குழுமங்கள் ஒன்றையொன்று சார்ந்தும் - அரவணைத்தும் செல்வதற்குப் பயன்படும் அற்புதக் கருவிகளே. அவை எப்போது பிரிவினைவாதச் சித்தாந்தங்களாக மாறுகின்றனவோ, அப்போதே சமூகங்களுக்குள் தீய விதைகள் விதைக்கப்படுகின்றன. 'நல்ல நிலத்தில் வீழ்ந்த விதைகள் மட்டுமே பயன்தரும். பாறைகளிலும், தெருவிலும், முட்களிலும் வீழ்ந்த விதைகள் ஒருபோதும் பயன் தராது' - இது நற்செய்தியாளர் மத்தேயு சொன்னது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

கடினமான சூழலிலும் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதுதான் துணிச்சல்.

– எர்னஸ்ட் ஹெமிங்வே –




# நிதியியல் ஸ்திரத்தன்மைக்கு கட்டமைப்பை வலுப்படுத்துக!

## சர்வதேச நாணயநிதியம் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.19

இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணல் மற்றும் கட்டமைப்பு ரீதியான நடவடிக்கைகளை வலுப்படுத்தல் என்பன நீண்டகால அடிப்படையிலான வெற்றிக்கு அவசியம் என சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் மற்றும் பிரதிப்பணிப்பாளர் தோமஸ் ஹெல்பிளிங் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இலங்கையின் முன்னேற்றம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், தீவிர நெருக்கடியை அடுத்து சர்வதேச நாணயநிதியத்தின் மறுசீரமைப்புச் செயற்றிட்டத்தின்கீழ் தற்போது இலங்கையின் பொருளாதாரம் வலுவான வளர்ச்சிப்பாதையில் பயணித்துவருகிறது.
கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் 5 சதவீதம் எனும் வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அதன் நீட்சியாக இவ்வருடமும், அடுத்த வருடமும் பொருளாதார வளர்ச்சி 4.2 சதவீதமாகப் பதிவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை தற்போதைய பொருளாதார அடைவுகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கு இந்தச் செயற்றிட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும் - என்றார். (ச-இ)

# இலக்கைத் தாண்டியது வரி வருமானம்

கடந்த மாதம் 30ஆம் திகதி வரை எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தைவிடவும் அதிக வரி வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
கடந்த மாதம் 20ஆம் திகதி வரை எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானம் 1,610,599 மில்லியன் ரூபாவாக இருந்தபோதும் 1,641,997 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது என்று இறைவரித் திணைக்கள அதிகாரிகள் நாடாளுமன்ற வழிவகைகள் தொடர்பான குழுவுக்குத் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்ற வழிவகைகள் தொடர்பான குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க தலைமையில் அண்மையில் கூடியபோது, கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு வரி வருமான இலக்குகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது.
அதன்போது அதிகாரிகள் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# சாடிகளில் கஞ்சா; ஒருவர் சிக்கினார்

காலி, ஒக். 19
காலி நிதஹஸ் மாவத்தைப் பகுதியிலுள்ள வீடொன்றில் சாடிகளில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சாச் செடிகளுடன் சந்தேகநபர் ஒருவர் யக்கலமுல்லப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
யக்கலமுல்லப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை காலி மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

# தரம்- 1 முதல் 6 வரையில் பாடப்புத்தகங்கள் இல்லை

கொழும்பு, ஒக்.19
அடுத்த கல்வியாண்டில், தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படாது என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்கு சுயகற்றல் கையேடுகள் வழங்கப்படும். இந்தச் சுய கற்றல் கையேடுகள் தற்போது அச்சிடப்படுகின்றன. மாணவர்களுக்கான பாடசாலைப் பைகளின் எடையைக் குறைக்கும் நோக்கில் புதிய கல்விச் சீர்திருத்தங்களின்கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பிரதிக் கல்வியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

# மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.19
மத்திய, வடமத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாறை, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - ஐப்பசி 3
20.10.2025
சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர இடம் ஒதுக்கப்படாமையால்

# கழிவகற்றல் செயற்பாடு மன்னாரில் ஸ்தம்பிதம்!


**மன்னார்,ஒக்.19**

**மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் அகற்றப்படும் கழிவுகளைக் கொட்டுவதற்கு நிரந்தர இடம் ஒதுக்கப்படாமையால், மன்னார் நகர சபையின் கழிவகற்றும் வாகனங்கள் மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் கழிவுகளுடன் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.**

இதுதொடர்பில் மன்னார் நகரசபை முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்துள்ளதாவது- இறுதியாக இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கழிவுகளைக் கொட்டுவதற்கு இரண்டு வாரத்தில் இடம் ஒதுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இரு மாதங்களாகியும் இடம் ஒதுக்கப்படவில்லை. இதுவரை சின்னக்கடை வட்டாரத்தில் கழிவுகளைக் கொட்டிவந்தோம். அந்தப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால், அவ்விடத்தில் குப்பை கொட்டுவது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் கழிவுகளைச் சேகரித்த வாகனங்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. நிரந்தர இடம் ஒதுக்கித்தரும்வரை மன்னாரில் கழிவு அகற்றல் இடம்பெறாது -என்றார்.

இதுதொடர்பில் மன்னார் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் தெரிவிக்கையில், மன்னார் நகரசபைப் பிரிவில் கழிவகற்றல் பிரச்சினை நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. ஏற்கனவே பாப்பாமோட்டைப் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் கழிவுகளைக் கொட்டிவந்தனர். குறித்த பகுதியில் கழிவுகளைக் கொட்டுவதற்கு எதிராக சூழலியல் அமைப்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடுத்ததன் காரணமாக குறித்த இடத்தில் தற்போது கழிவுகளைக் கொட்டத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் நகரசபையினர் அண்மைக்காலமாக மன்னார் மையப் பகுதியில் ஒரு இடத்தில் கழிவுகளைக் கொட்டிவந்தனர். அந்தப் பகுதிகளில் தொற்றுநோய் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதோடு,சூழல் மாசடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதனால் அந்த இடத்துக்கும் தடை ஏற்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் கூடுதலான நிலப்பகுதி வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின்கீழ் இருப்பதன் காரணத்தால், அவர்களுடன் கலந்துரையாடிப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்யவேண்டியிருந்தது. எனினும் பொருத்தமான இடம் தெரிவுசெய்யப்படவில்லை. விரைவில் இடம்தெரிவுசெய்யப்படும்- என்றார். (க-56)



## வர்த்தகத் தொடர்பை வலுப்படுத்த அமெ. பிரதிநிதிகளுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக்.19

உணவுப்பாதுகாப்பு, உணவு பதப்படுத்தல் செயன்முறை, ஏற்றுமதி மற்றும் துறைமுக நடவடிக்கைகள் உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளுக்கும் இடையிலானவர்த்தகமற்றும்முதலீட்டுத்தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக்கொள்வது தொடர்பாக இலங்கை - அமெரிக்கப் பிரதிநிதிகள் ஆராய்ந்துள்ளனர். இந்தச் சந்திப்பு இந்தவாரம் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

சந்திப்பில் ஈடுபட்ட குழுவில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான ஆர்வங்கொண்ட அமெரிக்காவின் வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் உள்ளடங்கியிருந்தனர்.

எதிர்வருங்காலங்களில் இணக்கப்பாடு எட்டப்படவிருக்கும் வர்த்தக ஒப்பந்தங்கள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் வர்த்தக வாய்ப்புகள் தொடர்பில் அமைச்சர் வசந்த சமரசிங்க அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், சந்தை நிலைவரங்களை ஒருங்கிணைப்பதற்கும் அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் தொடர்பிலும் அவர் எடுத்துரைத்தார். இலங்கையுடனான வர்த்தக மற்றும் ஏற்றுமதிசார் தொடர்புகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்வது குறித்தும், முதலீடுகளை வலுப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ-இ)



## யாழ். பொதுநூலகத்தில் கலாம் ஜனனதினம்!

யாழ்ப்பாணம்,ஒக்.19

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும், சிறந்த விஞ்ஞானியுமான அப்துல்கலாமின் 94 ஆவது பிறந்தநாள் நிகழ்வு, யாழ்ப்பாணம் பொது நூலக இந்தியக் கோர்ணரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், அப்துல்கலாமின் உருவச்சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து அப்துல்கலாமின் சிறந்த பங்களிப்புகள், தன்னம்பிக்கை, எளிமை, கல்விக்கான அர்ப்பணிப்பு தொடர்பான உரைகள் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் அப்துல் கலாம் நினைவாக நூலக வளாகத்தில் மரநடுகையும் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் ரட்ணம் செந்தில்மாறன், யாழ்ப்பாணம் பொதுநூலகப் பிரதம நூலகர் திருமதி சிவகரன் அனுசியா, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணம் பொதுநூலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)

## பாதாளக் குழுக்கள் விவகாரம் பக்கச்சார்பற்ற விசாரணை

### நாமல் வலியுறுத்து

கொழும்பு,ஒக்.19

பாதாளக் குழுக்களுக்குப் பின்னால் இருப்பது யார்? அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது யார்? உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். இஷாரா செவ்வந்தி கைதுசெய்யப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

செவ்வந்தி நேபாளத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது நல்லது. கைதானவர்கள் விரைவில் நாட்டுக்கு அழைத்துவரப்படவேண்டும். இந்தத் திட்டமிட்ட குற்றவாளிகளுக்குப் பின்னால் இருப்பது யார்? அவர்களுக்கு எவ்வாறு ஒத்துழைப்புக் கிடைக்கின்றது என்பது உட்பட அனைத்துத் தகவல்களையும் நாட்டு மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும். எனவே, பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம். கடற்படை முன்னாள் தளபதிக்கு நடந்ததுபோல விசாரணை இடம்பெறக்கூடாது-என்றார். (க-44)



## பொதுப்போக்குவரத்தின்போது மதகுருமாருக்கு முன்னுரிமை!

### யாழில் அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.19

வடக்கில் பொதுப்போக்குவரத்தில் மதகுருமாருக்கான ஆசனம் ஒதுக்கல் தொடர்பான செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள நெடுந்தூரச் சேவையை முன்னெடுக்கும் பேருந்து நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட மேலதிகச் செயலர் கை. சிவகரன் கலந்து அங்குரார்ப்பண நிகழ்வைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்திருந்தார்.

யாழ். மாவட்டத்தில் இனமத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக யாழ். மாவட்ட சர்வமதக்குழு ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மதகுருமார்களுக்கான ஆசனங்களை ஒதுக்குவது தொடர்பான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி பராசக்தி விஜயரத்தினம்

**சுரேஸ் (பாலசாரங்கா- கனடா)**
**அவர்களின் அன்புத் தாயார்**

தரத்திலே உயர்ந்து நின்று
தரனியில் மகிழ்ந்து வாழ்ந்தீர்
உரத்தினைக் கொடுக்கும் காலன்
உபத்திரவம் புரிந்து விட்டான்
போற்றிடும் இறைவன் பாதம்
போயினீர் நொந்து நின்றோம்


எமது மைத்துனரின் அன்புத் தாயார் இறந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 19.06.1949 — மறைவு 17.10.2025

**பஞ்சாற்சரம் குடும்பம்**
**சாரங்கா நகை மாடம்**
**உரிமையாளரும்**
**ஊழியர்களும்**

# மரண அறிவித்தல்



## மார்க்கண்டு இராசதுரை

தோற்றம் 02.03.1947 — மறைவு 18.10.2025

**(உரிமையாளர் - யாழ் பஸ்நிலையம் றோயல் கோப்பி சென்ரர்)**

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், கற்குளம் கொட்டடியை வசிப்பிடமாகவும், 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு இராசதுரை அவர்கள் நேற்று (18.10.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், அங்களாதேவி, புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், ஜீவகாந்தன் (ஜேர்மனி), றஜிதா (சுவிஸ்), றஞ்சித் (தோய்ல் கோப்பி சென்றற்), தாரகா, மதுவந்தி, ஜயகொரி, ராசன் (கனடா), ரவி (ஜெர்மனி), றஜனி (அமெரிக்கா), சங்கர் (கனடா), செல்வி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஷமிக்ஷா, அகமியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 213, 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்

**தகவல்: குடும்பத்தினர்**
**றஞ்சித் - மகன்**
**கௌசலா - மனைவி**
**077 801 9147**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
29 • 10 • 1955

மறைவு
20 • 09 • 2025

அமரர் திருமதி.

## தவராணி பரமானந்தம்

20.09.2025 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்னையின் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்தவேளை எம்முடன் பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

20.10.2025 திங்கட்கிழமை அன்று எமது இல்லத்தில் நிகழும் மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(CS 59661) E

தகவல்:
குடும்பத்தினர்
077 737 8936

35A, மகேஸ்வரி றோட்,
வெள்ளவத்தை.

# பெண்ணிடம் தங்கச் சங்கிலி அறுப்பு

## மரண அறிவித்தல்



தோற்றம்
28 ❖ 07 ❖ 1934

மறைவு
15 ❖ 10 ❖ 2025

### திரு. நவரட்ணம் சிவபாதம்

முன்னாள் அதிபர் அருணோதயா கல்லூரி,
(Retired Assistant Director of Education)

யாழ். அளவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை (Daya Road) வதிவிடமாகவும் கொண்டிருந்த நவரட்ணம் சிவபாதம் அவர்கள் 15.10.2025 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான நவரட்ணம், பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பாலயோகினி அவர்களின் அன்புக் கணவரும் கேதாரணியின் (Deputy Principal Saivamangaiyar Vidyalayam) பாசமிகு தந்தையும் செல்வக்குமாரனின் அன்பு மாமனாரும் செந்துஷான், பிரதாயினி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற குணலட்சுமி, காலஞ்சென்ற சிவநேசன், காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவமணி, காலஞ்சென்ற சிவமலர், சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோமேஸ்வரி, பக்ததேவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ன மலர்ச்சாலையில் 20.10.2025 அன்று (திங்கட்கிழமை) காலை 8.00 மணி தொடக்கம் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணிக்கு ஈமக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் பொரளை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


தகவல்: மகள், மருமகள்

தொடர்புகளுக்கு : 0776047598, 0714916746

யாழ்ப்பாணம் - புன்னாலைக் கட்டுவன் பகுதியில் பெண்ணொருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலி இரு இளைஞர்களால் நேற்றுக் கொள்ளையிடப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் பலாலி வீதியால் இளம் குடும்பப் பெண்ணொருவர் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, அவரின் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-66)

# மரண அறிவித்தல்



தோற்றம்
16.11.1947

மறைவு
15.10.2025

## சுப்பிரமணியம் தங்கராஜா

(உரிமையாளர் - ராஜ் ஜுவல்லர்ஸ்)

வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தங்கராஜா அவர்கள் கடந்த (15.10.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணி அவர்களின் அன்புக் கணவரும், ரிஜினோல்ராஜ் (ராஜ் ஜுவல்லர்ஸ் - சுன்னாகம்), ரூபேஜ்ராஜ் (ராஜ் ஜுவல்லர்ஸ் - திருநெல்வேலி), ரிஜிதாஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாரணி (பிரதேச செயலகம், உடுவில்), சிவாஜினி, நிர்மலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இந்திராணி, விக்கினராஜா, புஸ்பம், சுவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், மதுரிகா, அஷ்மிகா, லினோஜ்ராஜ், கீர்த்தனா, அனிஷ், பவிஷ், ஆதீஷ் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

64/7 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.


(CS/59689) J-1

தகவல்:
குடும்பத்தினர்
077 900 6957
077 663 6384

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. கருத்தரங்கில் சிறுவர் பாதுகாப்பு, சிறுவர்களது கடமைகள் மற்றும் பொறுப்பு கள், போதைப்பொருள் பாவனையின் பாதிப்புகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டது. வளவாளர்களாக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.எம்.ஈ. பிறிட்ஜெட், பிரதேசபோதைப்பொருள் தடுப்பு அலகின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.தர்மேந்திரா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)



அச்சுவேலி மத்திய கல்லூரியின் 2025ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கான தேர்தல், பாடசாலை அதிபர் நா. மகேந்திரராசா தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் வலி.கிழக்குப் பிரதேச சபையிலிருந்து தேர்தல் அதிகாரிகளாக இரு பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ச-இ)


## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.

சம்பளம் :- **50,000/-**

உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 480 33 79**

## நாகபூஷணி திருமண சேவை

அரச, தனியார், உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக, திருமணம் துரிதமாக நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்திலிருந்து
3 வீடு தள்ளிய லேனில்)

**077 138 7596, 071 9999 306**

## பெண் பணியாளர் தேவை

வீட்டில் தங்கிநின்று வயோதிப தாய் தந்தை இருவரையும் பராமரிக்க பெண் பணியாளர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:- **075 272 4964**

## வீட்டு வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றிட்கு குழந்தையை பராமரிக்கவும், வீட்டு வேலைகள் செய்யவும் அனுபவமுள்ள பெண் தேவை.
30 வயதிற்குட்பட்டவர்கள்விரும்பத்தக்கது.
தங்குமிட வசதி உடன் சனி, ஞாயிறு லீவும் வழங்கப்படும்.

தொடர்பு: **077 258 5564**

## திருநெல்வேலி காணி விற்பனைக்கு

பரப்பு - 02, 2 1/2, 01
மக்கள் வங்கி - 100 மீற்றர்
பலாலி வீதி - 75 மீற்றர்
தொடர்புகளுக்கு:-
**077 253 2575**





வட்டுக்கோட்டை பிரத்யங்கிரா அறக்கட்டளையின் சேவையில், லண்டனில் வசிக்கும் ஷ்ரேயா மற்றும் ருசஷான் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட கல்வீடு பெரியவிளான் இளவாலையில் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு கடந்த திங்கட்கிழமை கையளிக்கப்பட்டது. (ச-25, 63)

## மரண அறிவித்தல்

மலர்வு 19 . 06 . 1949

உதிர்வு 17 . 10 . 2025



### பராசக்தி விஜயரத்தினம்

மணல் ஒழுங்கை, புலோலி மேற்கு, திருநாவலூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி விஜயரத்தினம் அவர்கள் கடந்த (17.10.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (ஓய்வுநிலை அதிபர்) - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் தியாகராசா விஜயரத்தினம் (ஓய்வுநிலை வங்கி முகாமையாளர், இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் நல்லம்மாவின் (ஓய்வுநிலை ஆசிரியர்) அன்புப் பெறாமகளும், அமரர் திருச்செல்வம் (ஓய்வுநிலை தபாலதிபர்), வசந்தாதேவி (ஓய்வுநிலை ஆசிரியர்), விக்னேஸ்வரன் (கனடா), அமரர் ஜெயதேவி மற்றும் சோமாஸ்கந்தன் (ஓய்வுநிலை மருந்தாளர்), சிவகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுரேஷ் (கனடா), சுஜாதா, விஜிதா (கனடா), சபேஷ் (ஸ்ரீ அம்பாள் எலக்றிக்கல்ஸ்), சதீஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகுமாரி (கனடா), கதிரமலை (ஆசிரியர், யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்), லஜீபன் (கனடா), சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், விஷ்ணுஜி, கிருஷ்ணி, அபிஷ்ணவி, ஜசோபா, கிருஷிகா, கிருத்திகா, லஸ்மினி, கிருஷனா, அனிஷ்கா, அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சபேஷ் (மகன்) - 077 982 7995
சுஜாதா (மகள்) - 077 043 5767

தகவல்: குடும்பத்தினர்.
திருநாவலூர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 11 . 1930

மறைவு 18 . 10 . 2025



### நெல்லிநாதபிள்ளை ஜெயசிங்கம்

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - நெல் சந்தைப்படுத்தல் சபை)**
**(Administrative officer (Field Officer) Paddy Marketing Board)**

தண்ணீரூற்றை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நெல்லிநாதபிள்ளை ஜெயசிங்கம் அவர்கள் நேற்று (18.10.2025) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் நெல்லிநாதபிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோசேப் - பரஞ்சோதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மேரி அக்னஸ் இரட்ணராணி (இளைப்பாறிய ஆசிரியை) அன்பு கணவரும், J.B.நிமல்ராஜ் (ஆசிரியர்-சென். ஜோண்ஸ் கல்லூரி), பியட்றிஸ் நிமலினி (ஆசிரியை), J.G.நிமல்டேவ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மீரா (ஆசிரியை-சென். ஜோண்ஸ் கல்லூரி), பென்ஜமின் மோகணக்குமார் (இறைப்பாறிய ஆசிரியர், POG யாழ்ப்பாணக் கல்லூரி), துஷியந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், புஸ்பம் குணரட்ணம் (அவுஸ்தி ரேலியா), புஸ்பகாந்தா நெல்லிநாதபிள்ளை, ஜெயகாந்தா சௌந்தரராஜன் (கனடா) ஆகியோரின் சகோதரனும், ஜெரமி தேவறூபன் (Tutor, E-soft Uni), கிறிஸ்ரீனா தேவறூபி முன்பள்ளி ஆசிரியை - Smart Kids), அமண்டா நிஸ்ரின் (லண்டன்), இமல்டா ஜெஸ்மின், டியோனி (மருத்துவ பீட மாணவி), டிவானி, டேவிட்சன், டெபோரா, டானியலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு மானிப்பாய் வீதி, கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பரி.கன்னிமரியாள் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்..

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.
077 990 0070
075 380 1666

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 4223) A


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினம்

யாழ்ப்பாணம், ஒக்.19
ஆனைவிழுந்தான் கிராம கல்வாரி தேவாலயத்தின் 'மகிழ்ச்சியான குடும்பம்' சிறுவர் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தினம் பூநகரி கௌதாரிமுனைக் கடற்கரைப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்களால் சிறார்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து சிறார்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (ச-40,41,113)






# போதைப் பொருளுடன் இளைஞர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேக நபருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-26)

எமது அன்பான வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தீபாவளியை முன்னிட்டு இன்றிலிருந்து ஐந்து நாட்களுக்கு (24.10.2025) 15% விலைக்கழிவை வழங்குகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.**

**ஏற்கனவே சைவ மதிய உணவு வழங்கிக்கொண்டிருப்பதுடன் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இரவு உணவும் வழங்குகின்றோம் என்பதை அறியத்தருகின்றோம்.**

**ராஜா கிறீம் ஹவுஸ்**
198, கோவில் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்.

**ராஜா கிறீம் ஹவுஸ்**
36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 221 4479

# மரண அறிவித்தல்



**டேவிட் பிராங்க் ஜெயரட்ணம்**

இளவாலை சென் ஜேம்ஸ்சினை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்படமாகவும் கொண்ட டேவிட் பிராங்க் ஜெயரட்ணம் அவர்கள் கடந்த (17.10.2025) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைபதமடைந்தார்.
அன்னார் அமல உற்பவத்தின் அன்புக் கணவரும், றுக்ஸா, சுஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திரு. எஸ். டேவிட் திருமதி. டேவிட் திரேசம்மா தம்பதியரின் இரண்டாவது அன்பு மகனும், கிறிஸ்ரி ஆனந்தராஜ் (இத்தாலி), நிர்மலா ஜெயராஜ் (இங்கிலாந்து) கிளமன்ட் புஸ்பராஜ் (ஜேர்மனி), அருட்பணி இம்மனுவல் ரட்ணராஜ் அ.ம.தி (நோர்வே) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவர்.
அன்னாரின் இறுதியாத்திரைக்கான இரங்கல் திருப்பலி நாளை (20.10.2025) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து புனித யாகப்பர் இறைநம்பிக்கையாளர் துயிலும் இல்லத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி நிர்மலா ஜெயராஜ்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர்**
## வேலாயுதம் தெய்வேந்திரம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிரியைகள் 21.10.2025 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

670, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P:077 64 30 681

(CS 30612) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகர், திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், அரியாலை, கல்வியங்காடு, உரும்பிராய், இருபாலை, இணுவில் ஆகிய இடங்களில் சின்னப் பிள்ளைகள் இல்லாத அரச உத்தியோகத்தரின் சிறிய குடும்பத்திற்கு பாதுகாப்பான சூழலில் வீடு வாடகைக்குத் தேவை. வீடு நன்றாக பராமரித்து தரப்படும்.

தொடர்பு: 071 601 5020

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் சுத்தம் செய்வோர் (Cleaning), சிறிய பணியாளர் (Minor Staff) வேலை வாய்ப்புகள் உள்ளன.

தொடர்பு: 076 682 9413

## காணி விற்பனைக்கு

யாழ்/சுன்னாகம் K.K.S வீதிக்கு அருகாமையில் சிவன் வீதியில் பாவனைக் குரிய வீட்டுடன் 2 3/4 பரப்புக் காணியுடன் தரமான உறுதிப் பத்திரங்களுடன் விற்பனைக்கு உண்டு. No Brokers. S.P. Karan's

தொடர்பு: 077 343 4005

## மணமகள் தேவை

1992, இந்து, கார்த்திகை, DOCTOR
பூர்வீகம் - முல்லைத்தீவு, வதியுமிடம் - வவுனியா,
மணமகன் பதிவு இல: 11086.
தீபாவளி சலுகை 20.10.2025 வரையான பதிவுகளுக்கு 80% கழிவு
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## CAR FOR RENT - Elie Viva

Comfort - Reliable - Affordable



Flexible Terms
Monthly Package - Negotiable

Contact 077 774 5890

## வீடுகள் வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்து நவீன வசதிகளுடன் கூடிய சிறிய மற்றும் பெரிய வீடுகள் வாடகைக்கு தேவை

தொடர்பு: 077 557 3326

## காணி விற்பனைக்கு

யா/புன்னாலைகட்டுவன் பலாலி பிரதான வீதியின் முகப்பில் 50 அடி நீள முகப்பார்வை உள்ள மிகப் பெரிய காணி வணிக பயன்பாட்டிற்கு ஏற்ப தரமான உறுதிப் பத்திரங்களுடன் 12 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. 10 கோடி 60 லட்சம் (Negosible) No Brokers. S.P Karan's

தொடர்பு: 077 343 4005

## மணமகன் தேவை

1992, இந்து, பூரட்டாதி, DOCTOR
பூர்வீகம் - வேலணை, வதியுமிடம் - கொழும்பு,
மணமகள் பதிவு இல: 11886.
தீபாவளி சலுகை 20.10.2025 வரையான பதிவுகளுக்கு 80% கழிவு
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com




## காணி/வாடகை வீடு தேவை

தெல்லிப்பளை, மாவிட்டபுரம் மல்லாகம், சுன்னாகம் ஆகிய இடங்களில் பிரதான வீதிக்கும், குடியிருப்புகளுக்கும் அண்மையில் 2/3 பரப்பு காணி தேவை.

மேலும் தெல்லிப்பழையை அண்டி Attached bathroom உடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை

தொடர்பு: 077 733 6533

## மணமகள்கள் தேவை

- 1988 - அனுஷம் - 8 செவ் - கி.பா - [illegible] பட்டதாரி - அரசபணி
- 1991 - சித்திரை - 7 செவ், கி.பா - 25 - பட்டதாரி, அரசபணி
- 1990 - விசாகம் - 3 ல் செவ், பட்டதாரி (வியாபாரம், யாழ்)
- 1986 - சுவாதி (நட்) - 12 ல் செவ் (வியாபாரம் கடை, யாழ்)
- 1992 - கார்த்திகை - 7 ல் செவ் - பட்டதாரி - (கடை, கொழும்பு)

தொடர்புகளுக்கு:-
077 044 3589

## காணி விற்பனைக்கு

1, 1/2 பரப்புக் காணி, வீடு கிணறுடன் விற்பனைக்குண்டு. சிவன் கோவில் 300m ரோட்டுக்கரை

தொடர்புகளுக்கு (வாசுதேவன்)
077 651 1746 / 077 615 8906

## வேலைக்கு ஆட்கள் தேவை

சண்டிலிப்பாயில் அமைந்துள்ள வாகன சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு (JGP Auto Care) அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 [illegible]

## காணி விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 2 பரப்புக்காணி மின்சார நிலைய வீதியில் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 582 0084

## வேலை வாய்ப்பு

யாழ்நகரில் இயங்கும் ஏ ப்ளஸ் பிரியாணி உணவகத்துக்கு பின்வரும் வேலைக்கு பணியாளர்கள் தேவை

- உணவு பரிமாறுபவர் (Waiter)
  Basic Salary : 45000/=
- சமையல் உதவியாளர் (Kitchen helper)
  Basic Salary : 45000/=
- வரவேற்பாளர் - பெண் (Receptionist)
  Basic Salary : 45000/=

மேலும் திறமைக்கு ஏற்ப Salary அதிகரிக்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரத்தை பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

தொடர்புகளுக்கு: 077 721 4321
மின்னஞ்சல் முகவரி: aplusbiriyani@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கணபதிப்பிள்ளை...

செயலராகக் கடமையாற்றி, பின்னர் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற கணபதிப்பிள்ளை மகேசன், பின்னர் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளராகவும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் கடமையாற்றினார்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையுடன் அவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுச் செயலகத்தில் இவருக்கான சேவை நயப்பு விழா சிறப்பாக இடம்பெற்றது. (அ-ம-66)

## வங்காள...

கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட காற்றுச் சுழற்சி தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் 23ஆம் திகதியன்று புதிய தாழமுக்கம் உருவாகும் என்று கணிக்கப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய நிலைமைகளுக்கு அமைய இரு நாள்களுக்கு முன்னரேயே அந்தத் தாழமுக்கம் உருவாகும் சாத்தியங்கள் உள்ளதாகத் தெரிகின்றது. இது, ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக அல்லது வலுக்குறைந்த புயலாக கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உருவாகவுள்ள தாழமுக்கத்தால் இலங்கையின் எந்தப் பகுதிக்கும் நேரடியான பாதிப்புக்கள் இல்லை. ஆனாலும், எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு கடற் பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது.

இதேவேளை, தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் மழை மாத இறுதி வரை தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது - என்றுள்ளது. (அ-ம-66)

## மாகாணத்...

இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் கருத்துத் தெரிவிப்பதும், கவனம் செலுத்துவதும் தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்கும் போது தம்முடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு முரணான விடயங்கள். எனவே, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரின் செயற்பாட்டை, உடன்பாட்டை முடிவுக்குக் கொண்டு வரும் செயலாகக் கருத வேண்டியுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்தே, வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உயர்மட்டக் கலந்துரையாடலின் பின்னர், இந்த விடயம் தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பில் உள்ளது. ஆதலால்தான், அந்தத் திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம். தமிழரசுக் கட்சியினர் உட்பட பல தரப்பினரும் அதையேதான் சொல்கின்றனர்.

13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தல் நடந்தால், அதில் போட்டியிடுவோம் என்று தான் முன்னணியினரும் கூறுகின்றனர். தேர்தலை நடத்துமாறு கோரிக்கை வைப்பதும் தவறில்லை என்பதே அவர்களின் கருத்தாக அமைந்துள்ளது. எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் எமது நிலைப்பாட்டை முன்னணியினர் தவறாக விளங்கியிருந்தால், நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவே உள்ளோம்.

தமிழ்த்தேசியப் பேரவையில் இருந்து நாங்கள் விலகியுள்ளோம் என்று கஜேந்திரகுமார் எங்கும் சொல்லவில்லை. மாறாக, 'விலகிச் சென்றதாகக் கருத வேண்டியுள்ளது' என்றே கூறியிருந்தார். நாங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படியே செயற்பட்டு வருகின்றோம். ஒப்பந்தத்துக்கு முரணாக எதுவும் செய்யவில்லை. எனவே, இந்த விடயம் தொடர்பில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணியின் கட்டமைப்பை வலுப்படுத்துவது தொடர்பாகவும், எமது எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இன்றைய கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக அரசாங்கத்தில் இருப்போர் பல்வேறுபட்ட முரணான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். எனவே இந்தத் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் தமிழர்களிடம் உள்ளது. இந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் மேலும் பல கட்சிகளையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதற்குத் தயாராகவே உள்ளோம். கடந்த காலங்களில் கூட்டாகத் தேர்தலை எதிர்கொண்டிருந்தால், பெரியதொரு வாக்குப் பலத்தைப் பெற்றிருக்கலாம். எதிர்காலத்தில் அத்தகைய தவறுகள் நிகழக்கூடாது - என்றார். (அ-ம-110)

## யாழ்.பூர்வீகச்...

சாதனையொன்றைப் படைத்துள்ளார். பாரம்பரியசிம்பனிஇசைக்கலைஞர்களின் இசையைக் கண்டறிவதில் சாதனை படைத்திருக்கிறார். ஒரு நிமிடத்தில் 16 சிம்பனி இசைக் குறிப்புகளை அடையாளப்படுத்தியதில் இந்தச் சாதனை பதிவாகியுள்ளது.

பாஹ், பேத்தோவன், மொஷார்ட், ஷொபின், விவால்டி, ஷக்கோவ்ஸ்கி, டெபுசி, ரிம்ஸ்கி, வேர்டி போன்ற 65 இற்கும் மேற்பட்ட சிம்பனி இசைக் கலைஞர்களின் நூற்றுக்கணக்கான இசைகளை கணநேரத்தில் சிவாங்கால் கூறமுடிகிறது. பாஹ், மொஷார்ட், விவால்டி போன்ற இசை மேதைகளின் 16 இசைக் குறிப்புகளை ஒரு நிமிடத்துக்குள் அடையாளம் கண்டமைக்காகவே அவருக்கு கின்னஸ் சாதனை வழங்கப்பட்டுள்ளது. இவர் அறிவியல் எழுத்தாளரான ராஜ்சிவா மற்றும் கவிஞர் நிம்மி சிவா தம்பதிகளின் பேரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## அத்துமீறிய...

கடற்றொழிலாளர்கள் மற்றும் கடலட்டைப் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவற்றுக்கான தீர்வு தொடர்பிலும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவரின் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைவதைத் தடுப்பதற்குக் கடற்படையைப் பயன்படுத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஆக்கிரமிப்பதற்கு நாங்கள் எந்தவொரு தரப்பினருக்கும் இடம்கொடுக்கப் போவதில்லை.

மீன்பிடி ஏற்றுமதியில் கடந்த வருடம் 285 மில்லியன் டொலர் வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் ஏற்றுமதி மூலம், மேலும் அதிக வருமானத்தைப் பெறமுடியும். மீன்பிடியில் நவீன மயமாக்கல் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அதிகரித்துள்ளன. தேசிய மக்கள் சக்தி அரசு பொறுப்பேற்று ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் நாம் மாற்றத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். கடற்றொழில் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதே தற்போதைய இலக்காகவுள்ளது - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், யாழ்.மாவட்டச் செயலரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடபிராந்தியக் கட்டளைத் தளபதி, மாவட்ட மேலதிக செயலர், பிரதேச செயலாளர்கள், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம், கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமையகம், இலங்கை தேசிய நீர் உயிர் இன வளர்ப்பு அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகள் எனப் பலதரப்பினரும் கலந்துகொண்டனர். (அ-ம-66-26)

## நீதிகோரிப்...

இடம்பெறவிருந்த போராட்டத்துக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த வழக்கில், வழக்குத்தொடுநரால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணத்தையும், தாக்கல் செய்யப்பட்ட 'ஏ' அறிக்கையையும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தையும் ஆராய்ந்த நீதிமன்றம், இந்தப் போராட்டம் தற்போதைய நிலையில் அவசியமற்றது எனக் கருதி அதற்குத் தடை விதித்துள்ளது.

சடலம் மீட்கப்பட்டு ஓரிரு நாள்களில் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், புலன் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றால், அது புலன்விசாரணைக்குப் பாதகமாக அமையும் என்பதோடு, பிரதேசத்தில் அமைதியின்மையையும் ஏற்படுத்தும் என்பதன் அடிப்படையிலேயே, போராட்டத்துக்கு நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-27)

## யாழ்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை உருவாக்கப்பட்டு 175ஆவது ஆண்டு நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு சிறப்புத் தபால்தலையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை உருவாக்கப்பட்டு, 175 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டு, எதிர்வரும் நாள்களில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாகவே, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் தபால்தலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

அஞ்சல் திணைக்களத்தின் உதவி அஞ்சல் அத்தியட்சகர் நாயகம், வடமாகாண உதவி அஞ்சல் அத்தியட்சகர் நாயகம் மற்றும் அஞ்சல் துணைக் கிளை உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த தபால் தலையை வெளியிட்டுள்ளனர்.

நிகழ்வில் மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், ஸ்ரீபவானந்தராஜா, ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள், பிற உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-66-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செவ்வந்தி விடயத்தில் படம் காட்டுகிறது அரசு

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.19

வெளிநாட்டில் வைத்து கே.பி.யைக் கைதுசெய்து இலங்கைக்குக் கொண்டு வந்தபோது ஊடகக் கண்காட்சி காண்பிக்கப்படவில்லை. எனினும் செவ்வந்தி விடயத்தில் அவ்வாறு நடப்பது தவறான அணுகுமுறையாகும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டில் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்படும் குற்றவாளி விமானத்தில் இருந்து இறங்குவது முதல் எல்லாத் தகவல்களும் மிகவும் சுவாரஷ்யமாக ஊடகங்களில் வெளியாகின்றன.

இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள், இதைவிடவும் பயங்கரமான குற்றவாளிகளை வெளிநாட்டில் கைதுசெய்து அழைத்துவந்துள்ளன. உதாரணம் கே.பி. என்பவரைக் கைது செய்து நாட்டுக்குக் கொண்டுவந்தபோது, அவர் எப்படி வந்தார் என்பதுகூட யாருக்கும் தெரியாது. செவ்வந்தி விடயத்தில் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளைப் பார்க்கும்போது, பிரபலமாவதற்கு இது தான் வழி என்ற தவறான உணர்வு சிறார்கள் மத்தியில் ஏற்படக்கூடும். எமது நாட்டு விளையாட்டு வீரர்கள் வெளிநாடுகளில் சென்று பதக்கங்கள் வென்றுவரும்போது, அவற்றுக்கு ஏன் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை? அரசாங்கம் இதனை ஊடகக் கண்காட்சியாக்கியுள்ளது- என்றார். (ச-44)

### காணி உடனடி விற்பனைக்கு

யாழ் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில் குழாய்கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. வீடு விடுதி கட்டுவதற்கு உகந்தது.

தொடர்பு: 077 723 5740


### கட்டிடம் வாடகைக்குத் தேவை

வைத்திய நிலையம் (Clinic) அமைப்பதற்கு விசாலமான வீடு/கட்டிடம் தேவை

K.K.S வீதியில் (கொக்குவிலில் இருந்து வண்ணை சிவன் கோவில் வரையான பகுதி) அல்லது பலாலி வீதியில் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து திருநெல்வேலி வரையான பகுதி விரும்பத்தக்கது.

நீண்டகால வாடகை / குத்தகைக்கு

தொடர்பு: 077 918 5730



மழை வேண்டி நாவற்குழி தெருவருகு பிள்ளையார் ஆலயத்தில் இளநீர் உடைக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அபிஷேகத்துடன் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. அனைத்து விவசாயிகளையும் விசேட பூஜை வழிபாட்டில் கலந்துகொள்ளுமாறு நாவற்குழி மேற்கு கமக்கார அமைப்பு மற்றும் நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பு என்பன வேண்டுகோள் விடுத்துள்ளன. (எ-41-159)

# கைதிகளுக்கு உதவிய சிறை அதிகாரி கைது

களுத்துறை, ஒக்.19

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவருக்கு போதைப்பொருள் மற்றும் கைபேசிகளை வழங்க உதவியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட சிறைச்சாலை அதிகாரி ஒருவர் களுத்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான சிறை அதிகாரி 35,000 ரூபா பணத்தைப் பெற்றார் என்றும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)



கொடிகாமம் ஹற்றன் நஷனல் வங்கியின் 14 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் மரக்கன்றுகள் நடுகைசெய்யும்நிகழ்வு கடந்ததிங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25,159)



அரியாலை நாவலடி உதயதாரகை சிறுவர் கழகத்தின் சிறுவர்தினம் சிறுவர் கழக உப தலைவரின் தலைமையில் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான நிறுவனம், நல்லூர்ப் பிரதேச செயலகம், சி.சி.எச். நிறுவனம், யாழ்ப்பாண சிறுவர், பெண்கள் பொலிஸ்பிரிவு ஆகியன இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுத்தன. (ச-41)

# மரண அறிவித்தல்



தோற்றம்
23 . 12 . 1951

மறைவு
14 . 10 . 2025

## அமரர் தேவராசா சறோஜினிதேவி (தேவி)

சுதுமலை தெற்கு, சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தேவராசா சறோஜினிதேவி (தேவி) அவர்கள் கடந்த (14.10.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - கண்மணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், தேவராசா (தெய்வம் - இலங்கராசா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், அகிலரூபன், கௌரீசன், துஷ்யந்தினி, தினேஷன் (பிரான்ஸ்), கௌசிகா ஆகியோரின் அன்பு தாயாரும், சந்தானரூபி (பிரான்ஸ்), சரணியா, விக்கினரூபன் (பிரதிப் பரீட்சை ஆணையாளர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், கொழும்பு), மிறோஜினி (பிரான்ஸ்), ஶ்ரீபிரசாத் (பிராந்திய முகாமையாளர் CVS one Pvt Ltd) ஆகியோரின் அன்பு மாமியாரும், யதிகன், கேசிகன், தணிகைகுமரன், அக்ஷரன், அபிநயா, யுவாசினி, ஆதிரன், ஆதித்தியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான குணபாலு, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, குணசிங்கம், நாகேஸ்வரி, கணேசு மற்றும் பராசக்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (19.10.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கொக்குவில் மேற்கு
கொக்குவில்

தகவல்:
நா. தேவராசா (கணவர் - தெய்வம்)
077 278 8296

(CS/59688) J-1

# பணிநிலை வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் Telechoice Lanka (Pvt) Ltd நிறுவனத்தில் பின்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

ஆண்/ பெண் இருவரும் விண்ணப்பிக்கலாம்

- விற்பனை பிரதிநிதி (ஆண்கள்)
- CCTV Technician ( ஆண்கள்)
- அலுவலக உதவியாளர்(பெண்கள்)

வயது: 18–30,
தகைமை: G.C.E. (O/L) / மேலதிக தகைமைகள்
முடிவு நாள்: 26.10.2025

info.telechoice@gmail.com
0777279330, 0760818680

(CS/59673) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.10. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

கல்யாண வீட்டுக்குப் போனவுடன் சாப்பிட்டு
நல்வாழ்த்து பாவதையும் நீட்டினாரே – கல்யாணப்
பெண்மாறி விட்டதெனப் பாய்ந்தடித்து ஓடினாரே
பெண்ணினது பூச்சுமுகம் கண்டு.

பொன்.சுகந்தன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை (19.10.2025) சிகரம் :161

துவான் எம்.அசீஸ்

# செவ்வந்தி தப்பியோடியது எப்படி?



பிரபல குற்றவாளியான கணேமுல்ல சஞ்சீவவைக் கொலை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை, கொழும்பு, புதுக்கடை நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்குள் கொண்டுவந்தார் என்ற பரபரப்பான செய்திகள் வெளிவரத் தொடங்கியவுடன் இஷாரா செவ்வந்தி குறித்து முழுநாடுமே கதைக்க ஆரம்பித்தது.

அதன் பின்னர் இலங்கைப் பொலிஸார் அவரைக் கைதுசெய்வதற்கென சில பொலிஸ் குழுக்களை அமைத்து தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர். அந்தப் பொலிஸ் குழுக்கள் இஷாரா மறைந்திருப்பதாக சந்தேகப்பட்ட சுமார் 200 இடங்களில் தேடுதல் நடத்தினர். என்றாலும் அவரைக் கண்டு பிடிக்க இயலவில்லை.

இஷாரா, களுத்துறைப் பகுதியில் ஒரு தங்கநகை விற்பனை நிலையத்தில் தங்கநகைகளைக் கொள்வனவு செய்துள்ளார் என்ற விடயம் மாத்திரமே பொலிஸாரால் இஷாரா தொடர்பில் கண்டறியப்பட்டிருந்த ஒரேயொரு விடயமாகும்.

என்றாலும், உண்மையிலேயே அவர் அங்கு தங்கநகைகளை வாங்கியிருக்கவில்லை என்ற தகவல்கள் அப்போது கசிந்து கொண்டிருந்தன. அப்படித் தங்க நகை வாங்கியது இஷாராவா? அல்லது அவரது உருவத்தை ஒத்த வேறொரு பெண்ணா என்பது குறித்து மீள் விசாரணையிலும் பொலிஸார் இறங்கியிருக்கின்றனர்.

இஷாரா செவ்வந்தியைக் கண்டுபிடித்துத் தருவோருக்கு 12 இலட்சம் ரூபா சன்மானம் வழங்குவதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். என்றாலும், அவர் குறித்த எந்தவொரு தகவலும் கிடைத்திருக்கவில்லை.

மேலும், இஷாராவின் தாயார், சகோதரன் மட்டுமல்லாது அவருக்கு உதவியதாக இரு பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கைதுசெய்யப்பட்ட போதிலும், மேற்படி சந்தேகநபர் தொடர்பில் எந்தவொரு தகவலையும் தேடிக்கொள்ளப் பொலிஸாருக்கு இயலாமல் போய்விட்டது.

'ஏதேனுமொரு பாதாளக்குழு அவரைக் கொலை செய்து சடலம் கிடைக்காதவகையில் செய்துவிட்டனர்" என்றொரு கதை அந்தக் காலகட்டத்தில் பரவியிருந்தது.

'அவர் களவாக வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார்" என இன்னுமொரு தரப்பினர் கூறினர்.

என்றாலும், அவர் பற்றிய உறுதியானதொரு தகவலைப் பெறமுடியாது போய்விட்டது. ஒரு காலகட்டத்தில் முழு நாடுமே கதைத்துக் கொண்டிருந்த இஷாராவை அதன் பின்னர் மக்கள் மட்டும் அல்ல பொலிஸாரே மறந்துவிட்டனர். முழு நாடுமே கதைத்திருந்த இஷாரா செவ்வந்தி என்கின்ற சந்தேகநபர், சில நாள்களுக்குமுன், மிகவும் நுட்பமான முறையில் டுபாய் நாட்டுக்குத் தப்பிச்சென்றுள்ளார் என்றொரு செய்தி வெளிவந்திருந்தது.



இவரை டுபாய் நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கான அனைத்து உதவிகளையும் கணேமுல்ல சஞ்சீவவின் கொலையின் பிரதான சூத்திரதாரியான கெஹெல்பத்தர பத்மே என்பவரே செய்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

பாதாளக்குழுத் தலைவரான கெஹெல்பத்தர பத்மே, கணேமுல்ல சஞ்சீவ தொடர்பில் கடும் சீற்றத்துடன் இருந்து வந்தவர். கெஹெல்பத்தர பத்மேயின் தந்தையான நெவில் பெரேராவை 2021ஆம் ஆண்டு, கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்தமையே இதற்குக் காரணமாகும்.

கெஹெல்பத்தர பத்மே, கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் தன்னுடன் ஒரு கலந்துரையாடலில் கலந்துகொண்டார் என ஊடகவியலாளர் கயான் சமரசிங்ஹ என்பவர் கூறியிருந்தார்.

அப்போது, 'எந்தவொரு தவறும் செய்திராத எனது தந்தையை சஞ்சீவ அநியாயமாகக் கொலை செய்தான். அதற்குப் பழி வாங்குவதற்காகவேதான் நான் பாதாளக்குழுவில் சேர்ந்தேன். ஒருபோதும் சஞ்சீவ என்னிடமிருந்து தப்பிக்கமுடியாது. எந்த உலகில் இருந்தாலும் நான் அவனை வாழவிடமாட்டேன். அவனது உயிர் போவது என்னால் தான்" என கெஹெல்பத்தர பத்மே அந்த ஊடகவியலாளருக்குச் சொல்லியிருக்கிறார்.

பகிரங்கமாகவே இவ்வாறு கூறியிருந்த பத்மே, அதிலிருந்து ஒரு வருடம் கழித்து கொமாண்டோ சலிந்த உள்ளிட்ட குழுவினருடன் மிக நுட்பமாகத் திட்டமிட்டு, கொழும்பு, புதுக்கடை நீதிமன்றக் கட்டடத்தொகுதியினுள் கணேமுல்ல சஞ்சீவவைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்திருந்தார். இந்தக் கொலைத் திட்டத்தில் இஷாரா செவ்வந்தி என்ற பெண் மிகப்பிரதான பங்கு வகித்தார். கெஹெல்பத்தர பத்மேயின் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக எவ்விதமான அச்சமோ, சந்தேகமோ இன்றி, சட்டத்தரணியாக வேடமேற்று, கணேமுல்ல சஞ்சீவவைக் கொலை செய்வதற்குத் தேவையான துப்பாக்கியைக் கொலையாளிக்குச் சேர்ப்பிப்பதற்காக நீதிமன்றத்துக்குள் கொண்டு சென்றவர் இந்தச் செவ்வந்திதான்.

இலங்கையின் பாதாள உலகக்குழுக்களின் வரலாற்றில், இப்படியொரு பாரதூரமான குற்றமொன்றை விளைவிப்பதற்காக பகிரங்கமாகவே ஒரு பெண் பங்கேற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுதான். இதற்கு முன்பதாக பெண்கள் பாதாள உலகக் குழுக்களின் உறுப்பினர்களுடன் குற்றச்செயல்களில் இணைந்திருந்தாலும், இந்தளவு பகிரங்கமாக நேரடியாகச் செயற்பட்டிருக்கவில்லை.

கணேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பான செய்தி பரவி சில மணி நேரங்களுக்குள் இஷாரா செவ்வந்தி தொடர்பில் முழு நாடுமே தெரிந்துகொண்டிருந்தது. அத்துடன் அவரைக் கைது செய்வதற்கென இலங்கைப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்திருந்தும் மிக நீண்டகாலமாக அவரைக் கைது செய்ய முடியாமல் திணறினர். சில காலம் கழிந்துள்ள நிலையில் இஷாரா பற்றிய ஞாபகங்கள் மறக்கப்பட்டுவிட்டன.


06

**இலங்கையின் பாதாள உலகக்குழுக்களின் வரலாற்றில், இப்படியொரு பாரதூரமான குற்றமொன்றை விளைவிப்பதற்காக பகிரங்கமாகவே ஒரு பெண் பங்கேற்ற முதலாவது சந்தர்ப்பம் இதுதான். இதற்கு முன்பதாக பெண்கள் பாதாள உலகக்குழுக்களின் உறுப்பினர் களுடன் குற்றச்செயல்களில் இணைந்திருந்தாலும், இந்தளவு பகிரங்கமாக நேரடியாகச் செயற்பட்டிருக்கவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிநீக்க அரசியலில் முன்னாள் இயக்கங்கள்?



அ.நிக்ஸன்

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தருணத்தில் கடும் எதிர்ப்பு வெளியிட்ட ஜே.வி.பி., 1994ஆம் ஆண்டு முதன் முறையாக ஜனநாயக அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்ட நாள் முதல், மாகாணசபைத் தேர்தல்களிலும் போட்டியிட்டு ஆசனங்களைக் கைப்பற்றிவந்தது.

13ஆவது திருத்தச் சட்டம் இலங்கைத்தீவை பிளவுபடுத்தும் எனவும் தமிழீழம் அமையும் என்று கோஷம் எழுப்பி அன்று எதிர்ப்பு வெளியிட்ட ஜே.வி.பி. , 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் மாகாணசபைகள் முறையை நன்றாக அனுபவித்து அதனைத் தங்கள் கட்சியின் அரசியல் வளர்ச்சிக்கும் பயன்படுத்திக்கொண்டது.

2009ஆம் ஆண்டு மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில், மாகாணசபைகள் தேவையில்லை. 13 ஆவது திருத்தச் சட்டம் அவசியம் இல்லை என்ற தொனியில் ஜே.வி.பி.யின் குறிப்பாக அதன் முன்னாள் தலைவர் அமரர் சோமவன்ஸ அமரசிங்க மற்றும் பொதுச் செயலாளர் ரில்வின் ரில்வா ஆகியோர் அவ்வப்போது கூறி வந்தனர். 2017ஆம் ஆண்டு மைத்திரி - ரணில் ஆட்சியின் போது மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் நிறுத்தப்பட்டன. ஜே.வி.பி., தேசிய மக்கள் சக்தியாக தன்னை மாற்றிக் கொண்டு, 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் வரை, மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என ஒருபோதும் கோரியதில்லை.

அதாவது 2017 இல் மாகாணசபைகளின் ஆயுட் காலம் முடிவடைந்த காலத்தில் இருந்து முதல் 2024 ஆம் ஆண்டு நவம்பர் ( நாடாளுமன்றில் எதிர்க்கட்சியாக இருந்த காலம்) வரை மாகாணசபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என ஜே.வி.பி. ஒருபோதும் கேட்டதும் இல்லை , ஆர்ப்பாட்டங்களை நடத்தியதுமில்லை. ஆகவே, 1988 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்த்த அதேமன நிலைதான் தற்போதும் ஜே.வி.பி.க்கு உள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் அரசாங்கத்தை அமைத்தாலும், அடிப்படையில் ஜே.வி.பி. என்ற நிலையில், தமிழ் மக்கள் சார்ந்த விவகாரங்களில் அது இருப்பதையே சமீப கால அணுகுமுறைகள் காண்பிக்கின்றன.

இந்தப் பின்னணியில் முன்னாள் ஆயுத இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட், ரெலோ ஆகியவை மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என தொடர்ந்து கோருவதுடன் கூட்டங்களையும் யாழ்ப்பாணத்தில் நடத்தி வருகின்றன.

இந்த முன்னாள் இயக்கங்கள் 1988ஆம் ஆண்டே மாகாணசபை முறைமையை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஏற்றுக்கொண்டிருந்தன. ஆனாலும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகப் போராடியதால், தமது நிலைப்பாட்டை மாற்றி மாகாணசபை முறைமை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது எனவும் ஆனாலும் ஆரம்பப் புள்ளியாக அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கற்பிதம் செய்தன.

ஆனால் மிகச் சமீப நாள்களில் மாகாணசபைத் தேர்தல் முறைமை பற்றி அதிகமாக இந்த முன்னாள் இயக்கங்கள் உரையாட ஆரம்பித்துள்ளன. இந்த முன்னாள் இயக்கங்கள் 2022 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் மோடிக்கும் கடிதம் எழுதியிருந்தன. யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக கூட்டங்களை நடத்தியதுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோருடனும் தொடர்ச்சியாக உரையாடி 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துமாறும் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் எனவும் கோரி அந்தக் கடிதத்தை குறித்த இயக்கங்கள் மோடிக்கு அனுப்பியிருந்தன. ஆனால் அந்தக் கடிதம் அனுப்பும் விவகாரத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி பங்குகொள்ளவில்லை. அவர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்திருந்தனர். தமிழரசுக் கட்சி சில திருத்தங்களுடன் மோடிக்குக் கடிதம் எழுதிய செயற்பாட்டில் பங்குபற்றியிருந்தது. ஆகவே இங்கு புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், 13 ஆவது திருத்தச் சட்டத்தையோ மாகாணசபை முறைமையையோ சிங்கள அரசியல் தலைவர்கள் எவரும் விரும்பவில்லை என்பதுதான்.

ஆயுதப் போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்ததால் அதனைச் சமாளிக்க? அதுவும் இந்தியாவைச் சமாளிக்கவே- இந்த 13 என்பதையும் மாகாண சபை முறைமைகள் என்பதையும் வடக்கு? கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்கயில் அவ்வப்போது ஆட்சியில் இருந்த சிங்களத் தலைவர்கள் நடைமுறைப்படுத்தியிருந்தனரே தவிர இதயசுத்தியுடன் அவர்கள் 13 ஆம் திருத்தத்தை ஏற்கவில்லை.

ஆனால் போர் முடிவுக்குவந்த பின்னரான சூழலில் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்றை அமெரிக்கா சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றியபோது, 13ஐ அரசியல் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலும் '13 ' ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விடயம் இருந்தது. ஆனால் மஹிந்த ராஜபக்சவோ 2015 ஆட்சிக்கு வந்த ரணில் - மைத்திரி அரசாங்கமோ அதனை கவனத்தில் எடுக்கவில்லை.

**1988/89 ஆம் ஆண்டு அரசியல் சிந்தனைக்கு கூட்டாகச் செல்வதன் பின்னால் உள்ள காரண - காரியங்கள்**

**2009 இன் பின்னர், '13'கூட தேவை இல்லை என்று கருதும் சிங்களத் தலைவர்கள்.**

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, 2013 இல் முதன் முறையாக வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்திருந்தது. ஆனால் முதலமைச்சர் நிதியம் உள்ளிட்ட மாகாணங்களுக்குரிய பல அதிகாரங்களைச் செயற்படுத்த கொழும்பு நிர்வாகம் அனுமதித்திருக்கவிலலை.

வடக்கு - கிழக்கு தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர், 2007 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன்கூட மாகாணசபைகளுக்கு எவ்வித அதிகாரங்களும் இல்லை என்றே குறை கூறியிருந்தார்.

இணைந்த வடக்கு- கிழக்கில் முதன்முதலாக முதலமைச்சராகப் பதவி வகித்திருந்த வரதராஜபெருமாளும், மாகாணசபைகளுக்கு போதிய அதிகாரங்கள் இல்லை எனவும், இருக்கின்ற அதிகாரங்கள்கூட தெளிவில்லாமலே இருக்கின்றன என்றும் குற்றம் சுமத்தியிருந்தார். இப்பின்புலத்தில்தான், மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டுமென முன்னாள் ஆயுத இயக்கங்கள் மீண்டும் கோருகின்றன. ஆனால் இதுவரைக்கும் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள அரசியல்கட்சிகளோ முஸ்லிம் கட்சிகளோ மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வற்புறுத்தவில்லை. ஏனெனில் அது அவர்களுக்கு அவசியம் இல்லை. 2009 க்குப் பின்னரான சூழலில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து குறைந்தது 15 க்கும் மேற்பட்ட அதிகாரங்கள் மத்திய அரசினால் ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் மீளப் பெறப்பட்டுள்ளன.

அத்துடன் வடக்கு - கிழக்கில் சிங்களமயமாக்கல் தொடர்கின்றது. இராணுவ முகாம்களின் எண்ணிகையும் இராணுவத்தின் எண்ணிக்கைகளும் குறைக்கப்படவில்லை. இந்த நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தினாலும், அதனை உரிய முறையில் செயற்படுத்தமுடியாது. ஆகவே தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒருமித்த குரலில் அரசியல் விடுதலைக்கான கோரிக்கைகளை அழுத்தம் திருத்தமாக முன்வைக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி என்பதை உயர்வான அரசியல் கோரிக்கையாக முன்வைக்கவேண்டும். ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட 13 ஐ கோரும் போதும், தற்போது நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழ் நிர்வாக அதிகாரங்களை மாத்திரம் வழங்கினால்போதும் என்ற மன ஓட்டம் சிங்கள அரசியற் தலைவர்களிடம் வந்துவிடும். இப்போது கூட அவ்வாறான மனநிலையில் இருந்து கொண்டுதான் 2017இன் பின்னர் மாகாணசபைத் தேர்தலை நடத்த ரணில், கோத்தாபய ஆகியோர் விரும்பியிருக்கவில்லை. அதனையே அநுரகுமார திஸாநாயக்கவும் பின்பற்றுகிறார்.

'13' ஐ அமுல்படுத்தி இருக்கின்ற அதிகாரங்கள் ஊடாக வடக்கு-கிழக்கில் எதனையும் சாதிக்கமுடியும் என சில தமிழ்த்தேசியக் கட்சிகள் குறிப்பாக முன்னாள் ஆயுத இயக்கங்கள், தங்கள் அரசியல் வறுமையை பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றன என்ற முடிவுக்கு வரலாம். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்த நிலைப்பாட்டில் இல்லை. தமிழரசுக் கட்சி மதில் மேல் பூனை போன்று உள்ளது.

ஆகவே, இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை என்று கோரும் நிலையில், எதுவுமே இல்லாத மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருவது ஏற்புடைய அரசியல் அல்ல. அதுவும் உள்ளகப் பொறிமுறை என ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில், மாகாண சபைத் தேர்தலை நடத்தும் கோரிக்கைகள் தமிழத்தரப்பை மேலும் பலவீனப்படுத்தும்.

வடக்கு - கிழக்கு இணைந்த சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வுதான் பொருத்தமானது என்பதை இந்தியா விரும்பாது என்பது இந்த முன்னாள் தமிழ் ஆயுத இயக்கங்களுக்குத் தெரியும். ஆனால் தொடர்ச்சியாகவும் வலுவானதாகவும் கோரிக்கைகளை ஒருமித்த குரலில் முன்வைக்கும்போது அதற்குச் செவிசாய்க்கும் நிலை உருவாகும்.

1949 ஆம் ஆண்டு கல்லோயாக் குடியேற்றத்துடன் சிங்கள அரசியற் தலைவர்கள் ஆரம்பித்த இலங்கை ஒற்றையாட்சி அரசு என்ற கட்டமைப்பை அவர்கள் 2009 க்குப் பின்னரான சூழலில் மிக இலகுவாக வலுப்படுத்திவருகின்றனர். நியாயப்படுத்தியும் வருகின்றனர். உலகமும் அதனை ஏற்கிறது. எனவே மாகாணசபைத் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டு தங்கள் அரசியல் விடுதலைக் கோரிக்கையின் உயர்தரத்தை தாங்களே தரமிறக்குவது தமிழ் அரசியற் கட்சிகளுக்குப் பொருத்தமான அரசியல் உத்தி அல்ல. முன்னாள் ஆயத இயக்கங்கள் மீண்டும் 1988 / 89ஆம் ஆண்டு அரசியல் சிந்தனைக்கு மீளத் திரும்புவது ஒரு வகையில் புலிநீக்க அரசியல் என்றும் பொருள் கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...




## ஊருணி - ஊரவர்கள் கூடி நீருக்காக உரையாடும் களம்

நல்லூர் உற்சவகால நீர்வளக் கண்காட்சியைத் தொடர்ந்து இக் கண்காட்சி நடைபெற்ற இல்லத்தினை WASPAR செயற்றிட்டத்தின் மாதாந்த முயற்சிகளுக்கென ஒதுக்கிப் பெற்றுக் கொள்ளவும், எமது வட்டத்தினர் அவ் அரங்கத்தினை மாதந்தோறும் முழுநிலா (Poya) நாளன்று பாரம்பரிய "முழுநிலா முற்றம்" எனும் உரையாடல் களமாகவும், கலை, பண்பாட்டு ஆற்றுகைக்குரிய வெளியாகவும் செயற்படுத்த முற்பட்டுள்ளோம்.

இத்தொடரின் முதல் நிகழ்வு கடந்த மாதம் 7ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று சம்பிரதாயபூர்வமாக நல்லூர் புடவைக் கைத்தொழில் திணைக்கள வளாகத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. வடக்கின் இளம் நீர்வாண்மையாளர் வட்டத்தினைச் சார்ந்தோர், வடமாகாண நீர்வள உரையாடல் வட்டத்தினைச் சார்ந்தோர், நீர்வளம் சார் திணைக்களங்க ளைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர், நீரார்வலர்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் என வெவ்வேறான புலங்களைச் சேர்ந்தோர் மிக ஆர்வத்துடன் இதில் பங்குபற்றியிருந்தனர்.

இக்களத்தில், இந்தியாவின் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த புவிச்சரிதவியலாளரான (hydrogeologist) Dr.யோகேஷ் ஜடேஜா அவர்கள் "கையில் உள்ள எமது நீரும் கடலில் பெற்ற இன்னொரு நீரும்" என நாம் உரையாட எடுத்துக் கொண்ட தலைப்பினைத் தான் எவ்வாறு பார்க்கின்றேன் என்பதைத் தெளிவாக விளக்கினார். நாம் எமது பாரம்பரிய நில, நீர் வளங்களைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் எமக்குகந்த நீரைக் கையில் உள்ள நீராக வைத்துக்கொண்டு, மேலதிக தேவைகளுக்கென கடலிலிருந்து பெற்று வடித்தெடுத்த நீரை இன்னொரு மூலமாகப் பார்ப்பதன் நியாயம், சரி பிழைகள் பற்றி கலந்துரையாடினோம். மேலும் பாடசாலை மாணவி விஷ்மயா ஜெயதீஸ் "ஈழத்து மெல்லிசைப் பாடல்கள்" எனும் தலைப்பில் வழங்கிய இசையாற்றுகை அன்றைய கலைச் சிறப்பம்சமாக அமைந்தது.

**ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்**
**பேரறிவாளன் திரு.**

குறள்: 215

# புலமையாளர் பதில்



**கேள்வி :** பொது நீர்நிலைகளில் பாசித்திரள் தோன்றுவது காலத்திற்குக் காலம் பொதுவாகக் காணப்படும் ஒரு நிலைமை என்ற வகையில் அதனை ஏற்படுத்தும் காரணிகள் எவையெனக் கூறமுடியுமா? இவ்வகைத் திரள் தோன்றுவது தடுக்கப்படக்கூடியதா? பாசித்திரள் எவ்வகையில் மக்கள், கால்நடைகள் போன்றவற்றின் நீரின் தரத்தைப் பாதிக்கக்கூடும் என்பதையும் விளக்குவீர்களா?

**(க.சத்யா, கொக்குவில்)**

**பதில்:** ஒரு நீர்நிலையில், நைத்திரஜன், பொட்டாசியம், பொசுபரஸ் போன்ற கூறுகள் சரியான அளவில் காணப்படுகின்ற போது அந்நீர்நிலை ஆரோக்கியமானதாகக் கருதப்படுகின்றது. எனினும், மேற்குறிப்பிட்ட கூறுகள் அந்நீர்நிலையில் சடுதியாக அதிகரிக்கும் வேளையில், அங்கு காணப்படும் நீர்வாழ்தாவரங்கள் தம்மை மிகுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய ஏதுவான சூழ்நிலையினை அடைகின்றன. இதனால், அவை அந்நீர்மேற்பரப்பில் படர்ந்து, மொத்தநீர் மேற்பரப்பை மூடிய வண்ணம் வளர்ந்து காணப்படுவதை நாம் நீர் மலர்தல் (Eutrophication) என்கிறோம். இவ்வாறான தன்மை பாசியினால் ஏற்படும்போதே அதனைப் பாசித்திரள் (Algal bloom) என்று நாம் குறிப்பிடுகின்றோம். பொதுவாக, பாசித்திரட்சியானது நிலையாகத் தேங்கி இருக்கும் நீர்நிலைகளில் தோன்றுவதையே அவதானிக்கமுடிகின்றது. ஆறுகள் போன்ற நீர்நிலைகளின் இயல்பான நீரோட்டத்தின் காரணமாக, பாசித்திரட்சி தோன்றுவதில்லை. இவ்வாறு, பாசித்திரளானது தோன்றுவதற்கு பல்வேறான காரணங்கள் ஏதுவாக அமைகின்றன.

நீர்நிலைகளுக்கு அருகில் காணப்படும் வீடுகள், தொழிற்சாலைகள் அல்லது வேறு உற்பத்தி முயற்சி இடங்களில் இருந்து அன்றாடம் ஏராளமான கழிவுகள் வெளியேற்றப்படும். இவ்வாறு வெளியேற்றப்படும் கழிவுகளிலிருந்து நைத்திரஜன், பொட்டாசியம், பொசுபரஸ் போன்ற கூறுகள் சேதன நிலையில் இணைக்கப்பட்டவாறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ நீர்நிலைகளை அடைகின்றன. இவ்வாறு அடையும் கூறுகள், பிரிகையாக்கிகளின் வாயிலாக மிகுதியான போசணையினை நீர்நிலைகளுக்கு வழங்குகின்றன. இதனால் ஏற்படும் சடுதியான மாற்றமே, மிகுதியான பாசித்திரளை நீர்நிலைகளில் தோற்றுவிக்கக் காரணமாக அமைகின்றது.

மேலும், தேங்கி நிற்கும் நீர்நிலைகளானவை, ஒட்சிசனை வளிமண்டலத்தில் இருந்தும், தாவரங்களின் ஒளித்தொகுப்பின்போதும் பெறுகின்றன. நீர்நிலைகளில் வாழும் விலங்குகள், நீரில் கரைந்துள்ள ஒட்சிசனைப் பயன்படுத்தியே சுவாசச்செயற்பாட்டினை மேற்கொண்டு அங்கே வாழுகின்றன. எனினும் அதிகரித்த வெப்பமான காலப்பகுதிகளின்போது நீரிலுள்ள ஒட்சிசன் கரைதிறனானது பிரிகையாக்கிகளின் அதிகரித்த செயற்பாடு, பெருக்கம் காரணமாக படிப்படியாக குறைவடைகின்றது. தொடர்ந்து, பாசித்திரட்சியின் பாரிய அதிகரிப்புக் காரணமாக நீர்நிலைகளின் மேற்பரப்பானது ஒட்சிசனை அறவே பெற்றுக்கொள்ளவே முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. இதனால் அந்நீர்நிலையில் ஒட்சிசனை நம்பி வாழும் நீர்வாழ் விலங்குகள், உயிரினங்கள் பாரியளவில் உயிரிழக்கின்றன. இறந்த உயிரினங்கள் காரணமாக அந் நீர்நிலைகள் பாரதூரமாக மாசடைவதுடன், மனிதர் நடமாடமுடியாத பகுதியாகவும் மாறுகின்றது. இத் தன்மை, நீர்வாழ் உயிர்ப்பல்வகைமைச் செயற்பாட்டில் பாரியதோர் பிரதிகூலத்தினை ஏற்படுத்துகின்றது.

யாழ் மாவட்டத்தில் நிலத்தடிநீரைப் பெற்றுக்கொள்ளப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் நீர்க் கட்டமைப்புக்களாக கிணறுகள் காணப்படுகின்றன. எனினும், குறித்ததோர் பிரதேசத்தில் காணப்படும் பொது நீர்நிலைகள் பாசித்திரட்சியின் காரணமாக மாசடையும் போது, நச்சுப்பொருட்கள் நிலத்தடிநீர் மட்டத்தை அடைகின்றன. அவை நாம் அன்றாடம் நுகரும் கிணற்று நீரில் பல்வேறான மாசுபாட்டு நிலைமைகளை ஏற்படுத்துகின்றன. பொதுவாக இங்கே, நைட்ரஜன் மாசுபாடு, நுண்ணங்கிகளின் தாக்கம் காரணமாக, குறுங்கால, நாள்பட்ட சிறுநீரக நோய்கள், சுவாச நோய்கள் போன்ற நீர்சார் நோய்நிலைமைகள் தோன்ற நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்களிக்கின்றன. விவசாய இரசாயனங்களின் அதிகரித்த பயன்பாடே நீரில் நைட்ரஜன் மாசுபாடு பாரியளவில் ஏற்பட வழிவகுக்கின்றது. நைட்ரஜன் மாசுபாட்டினால், உடலில் உள்ள ஒட்சிசன் அளவு குறைவடைந்து சயனோசிஸ் எனப்படும் நீலக் குழந்தை பிறக்கும் நிகழ்வு தோன்றவும் காரணமாகின்றது. அதுமட்டுமன்றி மாடுகள் போன்ற கால்நடைகள் அந்நீரினைப் பருகும் போது, அவற்றில் இருந்து பெற்றுக்கொள்ளும் கால்நடை உற்பத்திகள் மூலம் நாம் கூட நீர்சார் நோய்நிலைமைக்கு முகம்கொடுக்க வேண்டிய ஏதுவான சூழ்நிலை அமைகின்றது.

இவ்வாறு, ஏராளமான பாதகநிலைமைகளை ஏற்படுத்தும் பாசித்திரட்சியினை நாம் எவ்வாறு தடுக்க முடியும்? நீர்நிலையின் மேற்பரப்பில் நீர்வாழ் தாவரங்கள் காணப்படுவது இயல்பே. எனினும் குறித்த நீர்நிலையின் ஒரு பகுதியிலாவது நீர் மேற்பரப்பானது எப்போதும் ஒட்சிசனை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதனை, நீர்ச்சுழலி போன்ற நவீன நீர் சார் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறை ரீதியாக தொடர்ச்சியாக செயற்படுத்திக்கொள்ள முடியும்.

யாழ். மாவட்டமானது, அன்றாட நீர்த்தேவைகளுக்கு, நிலத்தடிநீரை நம்பியிருக்கின்ற சமூகமாகவே காணப்படுகின்றது. இங்கே, நிலத்தடிநீர் மட்டத்தை தொடர்சியாகப் பேணுவதற்கும், அதன் ஆரோக்கியத்திற்கும், நிலத்தடிநீரை மீள்நிரப்பும் செயற்பாட்டிற்கும் இவ்வாறான நீர்நிலைகள் உதவுகின்றன. நாம் நுகரும் நீரை ஆரோக்கியமாகப் பேணுவதில் இவ்வாறான பொதுநீர்நிலைகளுக்கும் பங்கு உள்ளது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். எனவே, ஒவ்வோர் பிரதேசத்தில் காணப்படும் பொது நீர்நிலைகளை பிரஜைகள் அனைவரும் ஒன்றிணைந்து மாசுபடாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். இக் கருத்தை மக்கள் மத்தியில் வலியுறுத்துவதும், தெளிவுபடுத்துவதும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் மிக அவசியமாகும். இவற்றை காலத்திற்குக் காலம் சுத்தப்படுத்துவதுடன், மிக முக்கியமாக, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தூர்வாருதல் அல்லது வண்டல் நீக்கம் மேற்கொள்வதன் மூலம் இவற்றை ஆரோக்கியமாகப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மேலும், இப் பொதுநீர் நிலைகளில் நீர் சார் இரசாயனப் பரிசோதனைகளை காலத்திற்குக் காலம் மேற்கொள்வது முக்கியமானதாகும். இவ்வாறான பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது, நீரில் காணப்படும் கூறுகள் குறித்த நியம அளவில் காணப்படுகிறதா என்பதையும், நீர் ஆரோக்கியமானதா? மாசடைந்துள்ளதா? என்றவாறான பல்வேறான விடயங்களை எம்மால் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும்.

**கலாநிதி அபிராமி சிவரூபன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல் துறை,
விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்.

## கடந்த மாத அமர்வு

# நீர் ஆதாரங்களை அழிவிலிருந்து காப்பாற்றுதல்! அனைவரதும் கடப்பாடே!

வடக்கின் இளம் நீர்வாண்மையாளர் வட்டத்தின் கடந்த மாத அமர்வில் "தென்மராட்சிப் பிரதேசத்துக் குளங்களைத் தூர்வாருதல் அண்மைய அனுபவங்கள்" எனும் தலைப்பிலான முன்னிலைப்படுத்துகையை எந்திரி ந.சஞ்சேயன் வழங்கியிருந்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் நிலத்தோற்ற அமைப்பானது நிலத்தடி நீரைத் தேக்கி வைக்கக்கூடிய வகையில் முதன்மை இடம் வகிப்பதுடன், நிலத்தடிநீரின் பயன்பாட்டிற்குரிய வழிகள் பின்பற்றப்படும் பிரதேசமாகவும் விளங்குகின்றது. யாழ். மாவட்டத்திலே அதிகளவான குளங்களைக் கொண்டிருப்பதுடன், கேணிகள், துரவுகள், குட்டைகள், வெளிகள், வெட்டைகள் போன்றன அதிகம் காணப்படும் வலயமாகவுமுள்ளது.

நிலத்தின் மேற்பரப்பில் நீரைத் தேக்கி வைப்பதன் மூலம் நிலத்தடிநீரின் மீள்நிரப்பும் செயற்பாட்டிற்கும், நிலத்தடிநீர் முகாமைத்துவத்துக்கும் பங்களிக்க முடியும் என்பது வலியுறுத்தப்பட்டதுடன், இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் தூர்வாருதல் அல்லது வண்டல் நீக்கம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தூர்ந்துபோன குளங்களை மறுசீரமைக்கும் செயற்பாட்டின் முக்கியத்துவம் தெளிவுபடுத்தப்பட்டது.

இம் முன்னிலைப்படுத்துகையின் போது, 2016 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தென்மராட்சிப் பிரதேசத்தில் 397 குளங்கள் அடையாளப்படுத்தப்பட்டதுடன், தற்போது 293 குளங்கள் மட்டுமே எஞ்சியுள்ளதுடன், 104 குளங்கள் காணாமற்போயுள்ளமை எனும் அதிர்ச்சிக்குரிய விடயமும் வெளிப்படுத்தப்பட்டது.

"காணாமற்போன நீராதாரங்களைக் கண்டறிதல்" எனும் கருத்தை முன்னிலைப்படுத்தி செயற்பாடு முதலில் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து, எஞ்சியுள்ள நீராதாரங்களையேனும் காப்பாற்றுவதன் மூலம் நிலத்தடி நீரின் மீள்நிரப்பல், நிலத்தடிநீர் முகாமைத்துவம், உயிர்ப்பல்வகைமையினை நடைமுறைப்படுத்தல் மட்டுமன்றி குடிநீரின் தரம் தொடர்பில் மாற்றத்தையும் ஏற்படுத்த முடியும் எனும் அடிப்படையில் பாரிய கவனம் செலுத்தப்பட்டது.

இதற்காக 2022 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரையில் அங்கு காணப்படும் குளங்கள், கேணிகள், துரவுகளைக் கையிலெடுத்து அவற்றை மறுசீரமைக்கும் செயற்பாடுகளைக் குறிப்பிடமுடியும். இதற்கு எடுத்துக்காட்டாக, இராமாவில், கல்வயல், உப்புக்கேணி, குஞ்சர் துரவு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயற்பாடுகளைக் குறிப்பிடமுடியும். இவற்றில் சில சீரமைப்புப் பணிகள், பொதுமக்கள், தன்னார்வலர்கள், சமூக மட்ட அமைப்புக்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் ஆர்வம், ஒத்துழைப்புடனான கூட்டிணைவில் மேற்கொள்ளப்பட்டமை பாரிய வெற்றியாக வெளிப்படுத்தப்பட்டது.


நிலத்தடிநீர் முகாமைத்துவத்தை ஏற்படுத்தும் தூரநோக்கிலான செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் சவால்களும், பிரச்சினைகளும் காணப்படினும் தொடர்ச்சியாக அவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதன் அடிப்படையில் எமது சமூகம் இவ்விடயத்தில் விழிப்படைந்து வருகிறது எனக் கொள்ளலாம்.

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு ஊர்களிலும் உள்ள நீராதாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது மிக அவசியமாகும். இவ் நீராதாரங்கள் நிலத்தடிநீர் முகாமைத்துவத்தை ஏற்படுத்தவும், நீர் முகாமைத்துவம் தொடர்பில் தன்னிறைவினை அடையவும், பாரிய பங்களிக்கின்றமையை உணர்ந்து செயலாற்றுவது ஒவ்வொருவரது கடப்பாடுகளில் முக்கியமானதாகும். இவற்றை அழிவடையாமல் காப்பாற்றுவதற்காகவும், மீளச்சீரமைக்கவும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் அவற்றின் நிலைத்திருப்புக்கு நிச்சயமாக எம்மால் உறுதுணையளிக்கமுடியும்!

*எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி துளியின் 19 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துப் 'பிக் மீ'



செ.அனுத்திரா

'சில்' என்ற குளிர்காற்று உடலில் பட்டபோது கண்விழித்தேன். சனக்கூட்டம் குறைந்திருந்தது. பேருந்து இருக்கைகள் காலியாக இருந்தன. ஜன்னலை முழுவதுமாகத் திறந்துவிட்டுத் தலையை வெளியே நீட்டிப் பார்த்தேன். சூரியன் அடிவானில் மறைந்துகொண்டிருந்தான். நடத்துநரிடம், "அண்ணா, இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் யாழ்ப்பாணம் போய்ச்சேர?" என்று கேட்டபோது, கையில் கட்டியிருந்த கறுப்பு மணிக்கூட்டைப் பார்த்து, "இன்னும் ஒரு மணித்தியாலத்தில போயிரலாம்" என்று கூறிக்கொண்டே வாசல் படிக்கட்டில் இறங்கி நின்றுகொண்டார்.

ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டிருந்தபோது, யாழ்ப்பாணப் பழக்கடைகளைப் பஸ் கடந்தது. கீச் என்ற சத்தத்துடன் நிறுத்தப்பட்டது. எட்டிப் பார்த்தேன், அது யாழ்ப்பாணப் பேருந்துத் தரிப்பிடம்தான். வீட்டிலிருந்து கொண்டுவந்த தேங்காய், அரிசி, அம்மா ஆசையாகச் சுட்டுத்தந்த பலகாரப் பைகளையும் எடுத்துக்கொண்டு பேருந்தின் முன்பக்கமாகச் சென்று இறங்கினேன்.

கால் வைத்த உடனேயே, பக்கத்தில் நின்ற முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள் "ஆட்டோவா? வாங்கோ, ஏறுங்கோ!" எனக் கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். நான் எனது பொருள்களைத் தூக்கிக்கொண்டு மினிபஸ் பக்கமாக நடந்தேன். தூக்கக்கலக்கத்தில் கால்கள் தள்ளாடின.

மினிபஸ்ஸின் நடத்துநர், கத்தரிக்காய் மூடை பிணைவது போல் பஸ்ஸின் உள்ளே நபர்களை அடுக்கிக்கொண்டிருந்தார். எனக்குப் பார்க்கவே மூச்சு முட்டியது. இன்று ஞாயிற்றுக்கிழமை. இதுதான் கடைசி பஸ் என்பது எனக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது. இருந்தாலும், இந்தப் பஸ்ஸில் போனால் பொருள்களை எல்லாம் சிந்திவிட்டு, நானும் அலங்கோலமாகத்தான் இறங்க வேண்டும். அதைவிட நடந்து போய்விடலாம் என்று தோன்றியது. ஆனால், கையிலுள்ள பைகளைத் தூக்கி எவ்வளவு தூரம் நடக்கமுடியும் என்னால்? 'சரி' என்று முச்சக்கரவண்டித் தரிப்பிடத்துக்குச் சென்றேன். கொஞ்சம் பழக்கப்பட்ட நபரின் முச்சக்கரவண்டியில் ஏறினேன். அது "டுக்கு டுக்கு" என்று புகையைத் தள்ளிக்கொண்டு கிளம்பியது.

சிறிது தூரப் பயணத்தின் பின்னர், "என்ன அண்ணா, எப்படிப் போகுது வேலை? எல்லாம்?" எனக் கேட்டேன். "எங்கம்மா ஏதோ போகுது. இப்ப பெருசா ஓட்டம் வாறது இல்ல. அங்கினேக்கத் தெரிஞ்ச கொஞ்சப்பேர் வருவினம். மற்றபடி குறைஞ்சிட்டு. இப்ப சனங்கள் பிக்மீ போட்டுப் போகுதுகள்" என்றார்.

"ஓம், அண்ணா, நானும் கேள்விப்பட்டன்!"

"தெரியுமோ பிள்ளை, உனக்கு பிக்மீ பற்றி?" எனக் கேட்டார்.

எதுவும் சொல்லாமல், கூகுளில் அந்தக்கொம்பெனியைப் பற்றித் தேடிப் பார்த்தேன். அதில் பிக்மீயைப் பற்றி ஆதிமுதல் அந்தம் வரையான தகவல்கள் கொட்டிக்கிடந்தன.

ஏற்கனவே வெளிநாடுகளில் கொடிகட்டிப் பறந்த இந்த 'பிக்மீ' சேவை நிறுவனத்தை டிஜிற்றல் மொபிலிட்டி சொல்யூஷன்ஸ் லங்கா (லிமிடெட்) நிறுவனம் , 2015 இல் ஜூன் மாதம் இலங்கையிலும் அறிமுகப்படுத்தியது. ஆரம்பத்தில் கொழும்பிலும், பிறகு இலங்கையின் மற்ற நகரங்களுக்கும் மினி, நானோ, சொகுசுக் கார்கள், சொகுசுவாகனங்கள், பைக், டிரக் வாகனங்களையும் இணைத்தபடி பிக்மீ பரவியது.

2025 இல் இலங்கையில் கால்பதித்து பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய 'பிக்மீ', தற்போது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மூலம் சேவையை விரிவாக்கியுள்ளதுடன், தனியே போக்குவரத்துச் சேவையோடு நிற்காமல், அதையும் தாண்டி உணவு விநியோகம், பொருட்கள் விநியோகம், வாடகைக்கு வாகனங்களைக் கொடுத்தல் எனத் தன்னை விரிவாக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில், குறிப்பாக நல்லூர்த் திருவிழாக் காலப்பகுதியில், மக்களுக்குப் பல சலுகைகளை வழங்கியதுடன் பலரது கவனத்தையும் பெற்றுள்ளது. கொழும்பில் தலைமை அலுவலகம் இருப்பதுடன், கண்டி, குருநாகல், யாழ்ப்பாணம், கம்பஹா போன்ற இடங்களில் கிளைகளை நிறுவிச் செயற்படுகின்றது.

அதைப் படித்துவிட்டு, ஓட்டோச் சாரதிக்கும் சொன்னேன்.

"சரி அண்ணா, இதைப் பற்றிச் சொன்னா சொல்லிக்கொண்டே இருக்கலாம். அதுசரி, 'ஏன் நீங்கள் அதில சேரக்கூடாது?'" என்று கேட்டேன்.

"எனக்கு விருப்பமில்லை. ஏனெண்டால், எங்கட கஸ்டமர்ஸ் எங்களை நம்பித்தான் வருவாங்க. எங்களுக்கு அப்படியொரு உறவு நிலை. அது எப்பவும் மாறாது" என்றார்.

"ஓம், அண்ணா, அது உண்மைதான். எண்டாலும் எப்பவும் ஒரேமாதிரி இருக்காது. எல்லாரும் ஒரேமாதிரி இருக்கமாட்டாங்கள் தானே?"

"அது சரிதான் பிள்ளை. ஓட்டோக்காரர் எல்லாரும் ஒழுங்கா நடக்கினம் என்று சொல்ல முடியாது. சில பேர் பொம்பிளைப் பிள்ளையளோட சேட்டை விடுவினம். அதுபோக, ஓட்டோவுக்குள்ள ஏறும்போது ஒரு விலை, இறங்கும்போது இன்னொரு விலை சொல்லுவினம். ஆரும் புதுஆக்கள் ஏறினா, மூக்கைச் சுற்றித் தொடுற மாதிரி மீட்டர் போகும்."

"பிக்மீக் காரரும் அப்படித்தானே?" எனக் கேட்டார்.

"இல்ல, பிக் மீயில் அப்படிச் சொல்லமுடியாது. டிரைவருக்கும், ஓட்டோவில் போகிறவருக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. ஸ்மார்ட் போனில் பிக் மீ 'அப்பை' டவுண்லோட் பண்ணி, எங்களுக்குத் தேவையான நேரத்தில் போகலாம். இடம் தெரியாட்டியும் லொக்கேஷன் (Location) போட்டு சரியான இடத்துக்குப் போகலாம். டிரைவர் ஏதாச்சும் சேட்டை விட்டா, அவருக்கு எதிராக முறைப்பாடும் செய்யலாம்" என எனக்குத் தெரிந்த விடயங்களைப் பகிர்ந்துகொண்டேன்.

"உங்களுக்குத் தெரிஞ்ச வேற ஓட்டோக்காரர் பிக்மீயில பதிவு செய்யேலையோ?" என்று கேட்டேன்.

"ஒரு சிலர் போட்டவை. நான் போகேல்ல. வருமானத்தில் ஒரு பகுதி நிறுவனத்துக்குக் கொடுக்கணும். நிறுவனத்திட்ட இருந்து எந்த ஒரு கொடுப்பனவும் இல்லை. அதைவிட, இப்ப சனங்களும் மோசம். வீட்டிலிருந்து நூறு மீட்டர் தூரத்துக்கும் பிக்மீ போடுதுகள். அதெல்லாம் நட்டம். எனக்கு அதெல்லாம் சரிவராது. பெற்றோல் விற்கிற விலைக்கு வாகனம் திருத்திற காசுகூட வராது. தூரப்பயணம் என்றால் கொஞ்சம் காசு வரும், நம்பிப் போகலாம்" என்றார்.

"இப்ப பாக்கிற இடமெல்லாம் ஒரே ஓட்டோக்காரராத்தான் இருக்கு. அப்ப அவங்களுக்கு வருமானம் வராதோ?" என்று கேட்டபோது, "வருமானம் வரும். ஆனால், இங்க ஓட்டோ வைச்சிருக்கிறவயில கனபேருக்கு வெளிநாட்டுக்காரர்கள் தான் வாங்கிக் குடுத்திருப்பினம். அதைவிட குடும்பப் பாவனைக்காக வாங்கினதும் கனபேரிட்ட சும்மா நிக்குது." எனக் கூறியவர், "கலட்டிச் சந்திதானே? இந்தா வந்திட்டம் பிள்ளை!" என்று சொல்லிக்கொண்டே ஓட்டோவை நிறுத்தினார். ஆரியக் கூத்தாடினாலும், காரியத்தில் கண்ணாயிருக்கிறார் என நினைத்துக்கொண்டேன்.

"ஓம், அண்ணா, கதைச்சுக்கொண்டே வந்ததில இடம் வந்ததே தெரியேல்ல" என்று கூறிக்கொண்டே, ஓட்டோவிலிருந்து மெதுவாக இறங்கி, உரிய பணத்தைக் கொடுத்துவிட்டு, எனது இருப்பிடம் நோக்கி விரைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானமும் தமிழகமும்:

# தமிழகம்; புதுடில்லி; ஜெனிவா

நிலாந்தன்





"சிறிலங்கா தொடர்பான ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையின் 60/1 தீர்மானம் நீதியைப் பெற்றுத் தராது! தமிழர்கள் தம்மை ஒருங்கிணைத்துக்கொள்வதே முதற்பணி!' இது ஈழத் தமிழர்கள் வாழ்வுரிமை அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் தலைப்பாகும். ஈழப் போராட்டத்துக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த ஈழ உணர்வாளர்கள் இணைந்து உருவாக்கிய கட்டமைப்பே ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பா கும். கடந்த 13ஆம் திகதி அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் மணி கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கையின் ஒரு பகுதி கடைசியாக நிறை வேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானம் தொடர்பாக பின்வருமாறு கூறுகிறது -

"இந்தத் தீர்மானம் முந்தைய தீர்மானங்களில் இருந்து (30/1 (2015), 46/1 (2021) 51/1 (2022), 57/1 (2024) ஒருபடி கீழே இறங்கிவிட்டது. இந்தத் தீர்மானத்தில் முதல் முறையாக "சர்வதேசம்" என்ற சொல் அடியோடு நீக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச உதவியுடனான பொறுப்புக்கூறல் பொறிமுறை என்ற பேரவையின் முந்தைய உறுதிப்பாட்டிலிருந்து பின்வாங்கியதைக் குறிப்பதாகும். 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் சர்வதேச நீதிபதிகள் பங்கேற்புடனான கலப்புப் பொறிமுறை ஒன்றை முன்வைத்தது. ஆனால், பத்தாண்டுகள் கழித்து அதே பேரவையில் முந்தைய நிலைப்பாட்டை மறுத்து உள்நாட்டுப் புலனாய்வு என்று பேசுகிறது"

கடந்த 16 ஆண்டு கால ஜெனிவாமைய அல்லது மேற்கு நாடுகளை நோக்கிய ஈழத் தமிழ்த்தேசிய அரசியலின் தற்போதைய நிலை குறித்து தமிழகத்தில் உள்ள ஈழ ஆதரவுச் செயற்பாட்டாளர்களின் கருத்து அது.

தமிழகத்திலிருந்து வரும் கருத்துகளுக்கு ஒரே சமயத்தில் இனப்பரிமாணமும் பிராந்தியப் பரிமாணமும் இராஜதந்திரப் பரிமாணமும் உண்டு. ஏனென்றால் இந்தியப் பேரரசின் அரசியல் தீர்மானங்களின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய ஒரே சாத்தியவெளி தமிழகம்தான். ஈழத்தமிழர்கள் நொதிக்கச் செய்ய வேண்டியது தமிழகத்தைத்தான். தமிழகத்தைத் தவிர்த்துவிட்டு ஈழத்தமிழர்கள் நீதிக்கான போராட்டத்தில் நிர்ணயகரமாக முன்னேறமுடியாது. ஈழத்தமிழர்களுக்காக இதுவரை தமிழகத்தில் 19பேர் தீக்குளித்திருக்கிறார்கள். ஈழத்தில் இடம்பெற்ற இனஅழிப்புக்கு எதிராக முதலாவது தீர்மானத்தை நிறைவேற்றியது தமிழகந்தான். உலகில் உள்ள ஆகப்பெரிய தமிழ் சட்டமன்றம் அது. எட்டுக் கோடி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது. அங்கே நிறைவேற்றப்பட்ட இனஅழிப்புக்கு எதிரான தீர்மானத்துக்கு அரசியல் மற்றும் இராஜதந்திர முக்கியத்துவம் உண்டு. அதுபோல முதலாவதாக இனஅழிப்பு நினைவுத்திடலை தஞ்சாவூரில் கட்டியெழுப்பியதும் தமிழகந்தான்.

ஆனால் கடந்த 16ஆண்டுகளாக தமிழகத்தின் பரந்தளவிலான கவனக்குவிப்புக்குள் ஈழத்தமிழர்கள் இல்லை. ஈழத் தமிழர் விவகாரம் தமிழகத்தில் நொதிப்பை, கொந்தளிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இல்லை. செம்மணிப் புதைகுழி திறக்கப்பட்டிருந்த பின்னணிக்குள், கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி தமிழக வாழ்வுரிமைக்கட்சியின் ஏற்பாட்டில் சென்னையில், சுவாமி சிவானந்தா சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 'ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு சாட்சியாக விளங்கும் செம்மணி மனிதப் புதைகுழிகளுக்கு நீதி விசாரணை நடத்தக் கோரி ஐ.நா. மன்றத்தை வலியுறுத்தியும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஈழத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்தக்கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசிற்கு அனுப்பி ஒன்றிய அரசை வலியுறுத்தக் கோரியும்', அந்தப்பேரணியில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அந்தப் பேரணியோ அதில் பேசப்பட்ட விடயங்களோ ஈழத் தமிழர்களுடைய பிரதான ஊடகங்களில் பெரிய அளவுக்குக் கவனிப்பைப் பெறவில்லை.

திபெத்தியர்களின் சுதந்திரப் போராட்டத்தில் இதுவரையிலும் நூற்றுக்கும் அதிகமானவர்கள் திபெத்துக்காக தீக்குளித்திருக்கிறார்கள்.

இவர்கள் அனைவருமே திபெத்தவர்கள்தான். பிற இனத்தவர்களோ பிற நாட்டவர்களோ கிடையாது. ஆனால் ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்காக இதுவரை தமிழகத்தில் 19 தியாகிகள் தீக்குளித்திருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே தமிழகத்தவர்கள். இவர்களில் யாருமே இந்தியப் பேரரசின் ராஜதந்திர இலக்குகளை முன்வைத்துத் தீக்குளிக்கவில்லை. திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களைக் கேட்டோ, அல்லது பலாலி விமான நிலையத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டோ, அல்லது காங்கேசன்துறையில் இருந்து நாகப்பட்டினத்திற்கு பயணிகள் சேவையைத் தொடங்கவேண்டும் என்று கேட்டோ, அல்லது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றவேண்டும் என்று கேட்டோ அவர்கள் தீக்குளிக்கவில்லை. ஈழத் தமிழர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும்; நீதி கிடைக்கவேண்டும் என்று கேட்டுத்தான் தீக்குளித்தார்கள்.

உலகிலேயே கடலால் பிரிக்கப்படும் ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் கடலின் மறுபுறத்தில் இருக்கும் மக்களுக்காகத் தீக்குளித்தமை என்பது முன்னெப்பொழுதும் நவீன வரலாற்றில் இடம்பெற்றிராத ஓர் அரசியல் தோற்றப்பாடு. அந்த 19 தியாகிகளுக்காகவும் ஈழத்தமிழர்கள் என்றென்றும் தமிழகத்துக்குத் தலை வணங்கவேண்டும்.

அரசியல்வாதிகள் தங்களுடைய கட்சி அரசியலைத்தான் செய்வார்கள். ஆனால் அந்த 19 பேரும் அவர்கள் எந்த அரசியற்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கட்சி மைய அரசியலுக்காகத் தீக்குளிக்கவில்லை.

நடிகர் விஜய் கட்சி தொடங்கிய பின் பிரசாரக் கூட்டங்களை படிப்படியாக ஒழுங்குபடுத்தி வந்த ஒரு பின்னணிக்குள், ஈழத்தமிழர்களைப் பற்றியும் கதைக்க வேண்டிவந்தது. ஈழத் தமிழ் அரசியலை அங்கே கதைக்க வேண்டிய ஒரு தேவை இருப்பதைத்தான் அது காட்டுகின்றது. தமிழகத்தைத் தவிர்த்து விட்டு ஈழத்தமிழர்கள் நீதிக்கான போராட்டத்தில் வேகமாக முன்னேறமுடியாது.

நீதிக்கான போராட்டத்தில் இம்முறை ஜெனிவாத் தீர்மானமானது தமிழ் மக்களின் நோக்கு நிலையில் பின்னடைவுதான். ஆனால் அந்தப் பின்னடைவு கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தொடங்கிவிட்டது. அந்தத் தேர்தலில் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அரசாங்கத்துக்கு வாக்களித்தார்கள். அரசாங்கத்திற்கு ஏழு ஆசனங்கள். தமிழ்த் தேசியக் கட்சிகளில் பெரியதாகிய தமிழரசுக் கட்சிக்கும் ஏழு ஆசனங்கள். இதனால் அரசாங்கம் தமிழ் மக்கள் தனக்கு ஆணை வழங்கியிருப்பதாக உலகம் முழுவதும் கூறித் திரிகின்றது. எனவே ஐ.நா.வில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பின்னடைவு கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன்பு நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்டுவிட்டது.

வாழ்வுரிமை இயக்கத்தின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது போல ஐ.நா.வின் முன்னைய தீர்மானங்களில் இருந்தும் புதிய தீர்மானம் வழுக்கத் தொடங்கிவிட்டது. கடந்த 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஸ்ரீலங்காவை பொறுப்புக்கூற வைப்பதற்கான அலுவலகம் ஒன்று மனித உரிமைகள் பேரவையில் உருவாக்கப்பட்டது. இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானமானது அந்த அலுவலகத்தின் பணியை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கின்றது. அந்த அலுவலகமானது சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்குரியது. அது ஒரு சர்வதேச அலுவலகம். அதாவது சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் ஏற்பாடு ஏற்கனவே சர்வதேசப் பரிமாணத்தைப் பெற்றுவிட்டது. அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்குள் வருவதற்கு இன்றுவரை விசா இல்லை. அநுர ஜனாதிபதியாக வந்த பின்னரும் விசா இல்லை. மனித உரிமைகள் ஆணையாளர் நாட்டுக்கு வந்து போன பின்னரும் விசா இல்லை.

இவ்வாறு ஏற்கனவே சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் விடயம் சர்வதேசமயப்பட்ட பின்னரும், புதிய தீர்மானமானது உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையை சர்வதேச உதவிகளோடு பலப்படுத்தவேண்டும் என்று கூறுகின்றது. உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையை பலப்படுத்துவதென்றால் பிறகு எதற்கு சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு சர்வதேசக் கட்டமைப்பு? சில சமயம் ஐ.நா. கூறக்கூடும் 'அது ஓர் அழுத்தப் பிரயோக உத்தி 'என்று. அப்படிச் சொன்னாலும் ஒரு கேள்வி உண்டு. அது எதற்கான அழுத்தம்? இலங்கையைப் பொறுப்புக்கூறவைப்பதற்கான அழுத்தமா? அல்லது இலங்கை சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறுவதில் அதற்குள்ள வரையறைகளை உணர்த்துவதற்கான ஓர் அழுத்தமா?

எனவே ஐ.நா. தீர்மானத்தில் இருந்து தமிழ்மக்கள் படிக்க வேண்டியது என்னவென்றால், மேற்கத்திய நாடுகளை நோக்கிய ஈழத்தமிழ் அரசியலானது அதாவது குறிப்பாகச் சொன்னால் ஐ.நா.வை நோக்கிய ஈழத்தமிழ் அரசியலானது புதிய மாற்றங்களையும் புதிய வியூகங்களையும் வேண்டி நிற்கிறது என்பதுதான்.

முதலில் ஈழத் தமிழர்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்டிக் கொள்ளவேண்டும். இல்லையென்றால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ருசி கண்ட அரசாங்கம் இனிவரக்கூடிய தேர்தல்களிலும் தமிழ் மக்களின் ஆணையைப் பெற முயற்சிக்கும். எனவே முதலில் ஈழத் தமிழர்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்டிக்கொள்ளவேண்டும். அதன்பின் உலகத்தில் தமக்கு ஆதரவான சக்திகளைத் திரட்டிக் கொள்ளவேண்டும். தங்களை ஒரு தேசமாகத் திரட்டிக் கொண்டால்தான் ஓர் அரசைப்போல சிந்திக்கலாம்; செயற்படலாம். இந்தக் கட்டுரை எந்த ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் அறிக்கையில் தொடங்கியதோ அதே அறிக்கையின் இறுதிப்பகுதியை இங்கு கூறி முடிக்கலாம்...

"தமிழ்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஈழ ஆதரவு ஆற்றல்கள் தத்தமது அரசுகளை ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக திருப்புவதில் முழு ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக, தமிழ்நாட்டில் ஈழ ஆதரவு அரசியல் வலுப்பெற்றால்தான் இந்திய அரசின் நிலைப்பாட்டை மாற்றியமைக்கமுடியும். இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாமல் மேற்குலக நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றம் வந்துவிடப் போவதில்லை. "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

நானொரு புத்தகப் பைத்தியம் எண்டு சிவனுக்கு வடிவாத் தெரியும். அதாலஅவன் தாயோடை பெஞ்சனெடுக்கப்போய் வாங்கிக் கொண்டந்த அந்த “உயிர்ப்பு” சிறுகதைத் தொகுப்பை எனக்குக்காட்டி எப்பிடியிருக்குதெண்டு கேட்டான். நானதை ஆர்வத்தோடை வாங்கிப் பாத்திட்டு “எங்காலையடா? ”எண்டு கேட்டன். அப்பதான் தாய்க்காரி வாயைத்திறந்தா, “இந்த முறை யூனியனில பெஞ்சன் எடுக்கிறாக்களெல்லாருக்கும் உந்தப் புத்தகங் குடுபடுகுது. வீண்காசுதான். எண்டாலும் என்ன செய்யமுடியும்? எல்லாருமெடுக்கேக்குள்ளை வேண்டாமெண்டு நான் மட்டும் மறுக்கிறது அழகில்லை. அதால ஒண்டும் பறையாமல் வாங்கிக்கொண்டு வந்திட்டன்.”எண்டுசொன்னா. உண்மையிலஅதுஎனக்கு ஒரு புதையல் மாதிரித்தான் தோன்றிச்சுது.

அந்தப் புத்தகத்தின்ர அட்டைப் படமே வித்தியாசமா யிருந்திச்சுது. மஞ்சள் நிற பக்கிறவுண்டில கதை எழுதினாக்களின்ரை போட்டோக்களை ஒழுங்கில்லாமல் சிதறிவிட்டமாதிரி ஒரு செற்றப்பில அது இருந்தது. பின்னுக்குப் போட்டோவிலயிருக்கிறாக்களின்ரை பெயர்கள் இருந்தன. அதிலைதான் எனக்குக் கன ஆக்களின்ரை பெயர் தெரியவந்தது. பேராசிரியர் கா.சிவத்தம்பி ஒரு நீண்ட மதிப்புரையை “உயிர்ப்புகளின் உயிர்ப்பைத் தேடி” என்ற தலைப்பில் எழுதியிருந்தார். தெணியான், குப்பிழான் ஐ.சண்முகன், கருணையோகன், ராஜஸ்ரீகாந்தன், கண. மகேஸ்வரன், ச.முருகானந்தன், வன்னியகுலம், கே.பவானந்தன், நெல்லை க. பேரன் எண்டு பல பிரதேச எழுத்தாளர்களின் பெயர் எனக்கு அறிமுகமாவதற்கு அந்தப் புத்தகந்தான் காரணமாயிருந்தது.

50

பேராசிரியர் கா. சிவத்தம்பி என்றொருவர் இருக்கிறார் எண்டதே எனக்கு அந்த “உயிர்ப்பு” மூலமாத்தான் தெரியவந்தது. அவர் அதிலே எழுதியிருந்த விமர்சனத்தில் புத்தகப்பசி நிலை என்றொரு சொல்லைப் பிரயோகித்திருப்பார். அது என்னை வெகுவாகக் கவர்ந்தது. அந்தப் புத்தகம் நெல்லியடிக் கூட்டுறவுச்சங்கத்தின் கலாசாரப் பெருமன்றத்தின் வெளியீடாக வந்தபோது அந்தமன்றத்தின் செயலாளராக இருந்தவர் நெல்லை க. பேரன் என்றழைக்கப்பட்ட கந்தசாமி பேரம்பலம். நெல்லை க.பேரன் அந்தக்காலகட்டத்தில் ஒரு புகழ்பூத்த எழுத்தாளராக விளங்கினார். அவரது “ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்”, “விமானங்கள் மீண்டும் வரும்” “அந்த ஆயிரம் ரூபா” போன்ற படைப்புகள் பலராலும் பரவலாக வாசிக்கப்பட்டவை. நெல்லை க. பேரன் வீரகேசரி, ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி போன்ற பத்திரிகைகளுக்கெல்லாம் நிருபராக இருந்திருக்கிறார். அவர் நெல்லை க.பேரன் என்ற பெயரைத் தவிர உமாமணாளன்(அவரது மனைவியின் பெயர் உமா), ராஜி-விஜி(அவரது சகோதரிகளின் பெயர் ராஜி-விஜி) போன்ற பெயர்களிலும் எழுதியிருக்கிறார். அவர் ஒரு நெருக்கடியான அச்சந்தரும் போர்க்காலத்தில் வாழ்ந்த ஒரு படைப்பாளி. குப்பிழான் ஐ. சண்முகனோடு நான் கதைக்கும்போது அவர் நெல்லை க.பேரனைப் பற்றி, “பேரன் ஒரு நல்ல மனுசன். அவனுக்கு பகலிலை வெளியில வெளிக்கிட்டுத்திரியிறதுக்குப் பயம். ஏனெண்டால் வெளியில போகேக்குள்ளை பொம்பர் வந்து குண்டு போட்டுடும் எண்டு பதற்றத்தில இருப்பான். என்னை எங்கையும் வெளியில கண்டால் எங்கை வெளிக்கிட்டுத் திரியிறாய்? பொம்பர் வந்தாலும் கெதியாய் வீட்டைபோ!” எண்டு பேசுவான். (தொடரும்)

# செவ்வந்தி...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில் தான் செவ்வந்தியை நேபாள நாட்டில் பொறி வைத்துப் பிடித்து, நாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது இலங்கைப் பொலிஸ். நீதிமன்றுக்குள் கொலையாளியிடம் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு, பொலிஸாருக்கு டிமிக்கி காட்டிவிட்டு எப்படி செவ்வந்தி தப்பினார் என்பது இன்னும் மர்மமாகவே இருக்கின்றது. ஆனாலும் அவர் எங்கெங்கே சென்றார், எந்தவழியாக நேபாளம் போனார் என்பன குறித்த தகவல்கள் இப்போது ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கிவிட்டன.

கணேமுல்ல சஞ்சீவ கொலையின் பின்னர் இஷாரா முச்சக்கர வண்டிகளின்மூலம் பாணந்துறை, களுத்தறை மற்றும் மத்துகம ஆகிய பகுதிகளுக்கு சென்றுள்ளார். இதற்கு, தற்போது டுபாய் நாட்டில் மறைந்து வாழ்ந்துவருகின்ற நிலங்க என்பவரது வழிகாட்டலில் அவரது சகாக்கள் உதவியுள்ளனர். அடிக்கடி முச்சக்கர வண்டிகளை மாற்றி, மாற்றிப் பயணித்துள்ளதுடன். மத்துகமவில் இருந்து மித்தெனிய என்ற பகுதிக்கு இவர் ஒரு பொலிஸ் அதிகாரியுடன் சென்றுள்ளார்.

மதுகமவில் இருந்து இவரை மித்தெனியப் பகுதிக்குக் கொண்டு சென்று உதவியுள்ளவர் கெஹெல்பத்தர பத்மேயின் பணத்துக்கு அடிமையான ஒரு பொலிஸ் அதிகாரியாவார். பின்னர் இந்த பொலிஸ் அதிகாரி தன்னுடைய கள்ளக்காதலி தங்கியிருந்த மித்தெனிய பகுதியிலிருந்த ஒரு வீட்டில் இவரை மறைத்து வைத்துள்ளார். நாடு முழுவதுமாக பொலிஸார் இஷாராவைத் தேடிக்கொண்டிருந்த நிலையில், அவர் எந்தவிதமான தடைகளும் இன்றி அந்த வீட்டில் தங்கியிருந்துள்ளார். வீட்டுக்குள்ளேயே தங்கியிருந்த அவருக்குத் தேவையான அனைத்தையும் அந்தப் பொலிஸ் அதிகாரியும், அவரது கள்ளக்காதலியுமே செய்து கொடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இவரை இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதற்கென கெஹெல்பத்தர பத்மே அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார். இதற்கென மேலும் சில பாதாள உலகத் தலைவர்களின் உதவிகளையும் அவர் பெற்றிருந்தார்.

இஷாரா இந்தியாவுக்குத் தப்பிச்செல்வதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தாலும், அவரை அந்த வீட்டிலிருந்து வெளியில் எடுப்பது பெரும்பிரச்சினையாக இருந்தது. அந்த காலகட்டத்தில் நாடு முழுதும் பொலிஸார் அவரைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தமையே இதற்குக் காரணமாக இருந்தது. எனவே, இந்தச் சூடு தணியும் வரை அவரை அந்த வீட்டிலேயே மறைத்துவைக்குமாறு கெஹெல்பத்தர பத்மே அந்தப் பொலிஸ் அதிகாரிக்குக் கூறியிருந்தார். இதன் காரணமாக அவர் சில காலம் அந்த வீட்டிலேயே தங்கியிருந்துள்ளார்.

இப்படியே சில வாரங்கள் கழிந்தன. இஷாரா தொடர்பில் இருந்து வந்த சூடு தணிய ஆரம்பித்ததுடன், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட பத்மே, தனது திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பித்தார். இஷாராவை ஒரு படகில் ஏற்றி இந்தியாவுக்குக் கொண்டுசெல்வதே பத்மேவுடைய திட்டமாக இருந்தது. இதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அவர் செய்திருந்தார். கடந்த ஏப்ரல் மாதம் 14ஆம் திகதிக்கும் 20ஆம் திகதிக்கும் இடையில் இஷாராவுக்குப் பாதுகாப்பு வழங்கிய அந்தப் பொலிஸ் அதிகாரி,பின்னர் இன்னொரு பாதாளக்குழு உறுப்பினரான ஜே.கே.பாய் என்றநபரின் உதவியுடன் அவரைக்கிளிநொச்சிக்கு அனுப்பி, அங்கு தங்கவைத்தார். ஏனென்றால் இஷாரா சிங்களப் பெண் என்பதால்,அவரைத் தமிழ்ப் பிரதேசத்தில் பொலிஸார் தேடமாட்டார்கள் . இதனாலேயே அவரைத் தமிழ் யுவதி போல ஆடையணிவித்து,கிளிநொச்சியிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் தங்கவைத்தனர். அதன் பின்னர் கடற்படையின் நடமாட்டம் குறைந்த ஒரு நாளில், மீனவர்கள் சிலரின் உதவியோடு செவ்வந்தி படகில் ஏறி இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தியாவுக்குச் சென்ற பின்னர் செவ்வந்தி இந்தியப் பெண்ணாக மாற்றப்பட்டுள்ளார். அவருக்கென்று தனியானதொரு பெயர், வீடு, பெற்றோர் , சகோதர, சகோதரிகள் மட்டுமல்லாது இந்திய அரசாங்கத்தால் விநியோகிக்கப்படுகின்ற விமானக் கடவுச் சீட்டு போன்றவை அவருக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் பத்மே இந்தியாவில் உள்ள பாதாள உலக உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகர்களைக் கொண்டு ஏற்பாடு செய்திருந்தார். இலங்கையில் பிரபலமான பல பாதாள உலகத் தலைவர்கள் இந்தியாவுக்குச் சென்றே பிற நாடுகளுக்கு சென்றுள்ளனர்.

இந்தியாவில் இருந்தவாறு அனைத்து வேலைகளையும் பார்த்துக்கொண்ட இஷாரா, நேபாளத்துக்குத் தப்பிச்சென்றுள்ளார். அங்கு சில நாள்கள் தங்கியிருந்த அவர் டுபாய் நாட்டுக்குச் செல்ல முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதும், அவை பயனளிக்கவில்லை. ஆனால், இப்போது இஷாரா செவ்வந்தி கிட்டத்தட்ட 8 மாதங்களுக்குப் பின்னர், மேலும் நான்கு பேருடன் நேபாளத்தின் பக்தபூர் மாவட்டத்தில், காத்மண்டு நகரில், திப்பஸ்பார்க் பகுதியில் ஒரு சொகுசு வீட்டில் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த 13ஆம் திகதி இரவு வைத்து கைதுசெய்யப்பட்டு, தற்போது இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார். இந்தோனேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரும், கணேமுல்ல சஞ்சீவ கொலைவழக்கின் சூத்திரதாரியுமான கெஹெல்பத்தர பத்மே வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இஷாரா கைதுசெய்யப்பட்டுள்ளாரெனத் தெரிய வருகின்றது.

இஷாரா செவ்வந்தி மித்தெனிய பகுதியில் மறைந்திருந்ததில், ஐஸ் போதைப் பொருளுக்கான மூலப் பொருளை தம்வசம் வைத்திருந்ததாக ஏற்கனவே இலங்கையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ள, பெதுஜன முன்னணியின் கடந்த பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் சம்பத் மனம்பேரிக்குத் தொடர்புகள் ஏதும் இருந்தனவா? என்பது தொடர்பிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜே.கே. பாய் என்ற நபர், குற்றவாளிகளை சட்டவிரோதமான கடற்பாதையில் ஏனைய நாடுகளுக்கு கொண்டு சென்று விடுகின்ற வேலையை (ஏஜென்சி) தொழிலாகக் கொண்டவர் எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு இஷாராவை கொண்டு செல்வதற்கென இவருக்கு கெஹெல்பத்திர பத்மே கோடிக்கணக்கில் பணம் கொடுத்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இந்தியாவுக்கு இஷாராவைக் கொண்டு சென்ற ஜே.கே. பாய், சுமார் இரண்டு வாரங்களாக அங்கு வைத்திருந்து, பின்னர் 06 நாட்கள் கொண்ட நீண்டதூரப் புகையிரதப் பயணத்தில் நேபாளத்திற்கு கொண்டு சென்றுள்ளார். பின்னர் அங்கு காத்மண்டு நகரில் வாடகைக்கு வீடொன்றை எடுத்து இவரைத் தங்க வைத்திருக்கிறார். இவை அனைத்தும் ஜே.கே. பாய் தனது செல்வாக்கினை முன்வைத்து செய்தவையாகும் எனக் கூறப்படுகின்றது.

கொழும்பு, பேலியகொடை குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஓலுகல மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் பரிசோதகர் கிஹான் டி சில்வா ஆகியோர் மூன்று தினங்களாக நேபாளத்தில் தங்கியிருந்து, நேபாளப் பொலிஸார் மற்றும் சர்வதேசப் பொலிஸாரின் உதவியுடன் மேற்படி நபர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இஷாராவும் அவருடன் தங்கியிருந்த அனைவரும் நேபாளத்தில் காத்மண்டு நகரப் பகுதியில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளனர. ஏற்கனவே, கொழும்பு நீதிமன்றத்தில் வைத்துகொல்லப்பட்ட கணேமுல்ல சஞ்சீவவும் நேபாளத்தின் காத்மண்டு நகரிலிருந்து மாறுவேடத்தில் இலங்கை வந்த சமயமே கட்டுநாயக்க விமான நிலையத்தில்வைத்து கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. அதேநேரம், இந்தோனேசியாவில் வைத்து கைது செய்யப்பட்ட கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்டோரும் பல நாட்கள் நேபாளத்தில் தலைமறைவாக தங்கியிருந்தனர். நேபாளத்தில் வைத்து கணேமுல்ல சஞ்சீவவைக் கொலைசெய்யும்திட்டமும் இவர்களால்முன்னெடுக்கப்பட்டிருந்த சமயத்தில்தான் , கணேமுல்ல சஞ்சீவ அங்கிருந்து தப்பி, இலங்கைக்கு வந்திருந்தார்.

அப்படியானால் இலங்கையின் பாதாளக் குழுக்களுக்கு நேபாளம் சொர்க்கபுரியாக மாறியுள்ளதா என்ற கேள்வியும் இப்போது எழுகின்றது. ஆனால் ‘இஷாரா செவ்வந்தியைக் கைதுசெய்தது இலங்கைப் பொலிஸார் அல்லர். நேபாளப் பொலிஸாரும் சர்வதேசப் பொலிஸான இன்ரர்போல் அதிகாரிகளும் இணைந்து நடத்திய அதிரடிவேட்டையிலேயே செவ்வந்தி சிக்கினார்’ என பிரபல நேபாளப் பத்திரிகையான ’காத்மண்ட் போஸ்ட் ’தெரிவித்துள்ளது. ஆனால், இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட குழுவினரைக் கைதுசெய்த மாபெரும் சாகசத்தை, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் ஒலுகலவும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொலிஸ் பரிசோதகர் மஹிந்த ஜயசுந்தரவுமே என இலங்கைப் பொலிஸார் விளம்பரப்படுத்துகின்றனர்.

இதேபோன்றுதான், இந்தோனேசியாவில் வைத்து கெஹெல்பத்திர பத்மே உள்ளிட்ட பாதாளக்குழு உறுப்பினர்களையும், ஒலுகலவின் தலைமைத்துவத்தின் கீழ் சென்றிருந்த இலங்கை பொலிஸ் குழுவினரே கைது செய்தனர் என இலங்கை தெரிவித்திருந்தது. ஆனால் அதெல்லாம் பச்சைப்பொய் என்பதை, வீடியோ வெளியிட்டு, இந்தோனேசியப் பொலிஸார் வெளிப்படுத்தியிருந்தனர். அவர்கள் வெளியிட்டிருந்த வீடியோவில் பாதாளக்குழு உறுப்பினர்களை இந்தோனேசியப் பொலிஸாரே கைது செய்வது தெட்டத்தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

இஸாரா செவ்வந்தி நேபாளத்தில் தலைமறைவாக இருக்கிறார் என்பதைத் தேடிக் கண்டுபிடித்தவர்கள் நேபாள பாதுகாப்புத் தரப்பினரே என்றும் ‘காத்மண்ட் போஸ்ட் ’பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மினி




## போரின் கவிதை

ஆனந்தி

பள்ளிவாழ்வில் சிட்டுக்குருவிகளாக
பறந்து திரிந்தோம்
குண்டுகளுக்கும் செல்களுக்கும்
பயந்து மேசைக்குக் கீழ் பதுங்கி
உயிரைக் காப்பாற்ற அலைந்தோம்
நிம்மதிகளைத் தொலைத்து
நிச்சயமில்லா வாழ்வோடு
போராடிக் களைத்துச் சோர்ந்தோம்!

நட்பின் கரங்களால்
இறுகப் பற்றினோம்...
வானக்குடையின் கீழ்..
அழகாய்க் குடியிருந்தோம்..
பள்ளிவாழ்வு முடிந்ததும் பறந்தோம்
சிலர் வாழ்வு முடிய முன்பே..
தேசம் பிரிந்தனர்...
இந்த வாழ்வுக்குப் பயந்து
ஓடி ஒளித்துக்கொள்ளவும்
பாதுகாப்புக்காகவும்
புதிய தேசங்களை நோக்கிப்
பறவைகளாகப் பறந்தோம்.

காலம் ஒரு கணக்குப் போட்டது
பொற்காலம் வந்ததும்..
வசந்தகாலம் துளிர்த்தது
பள்ளிகள் அழைத்தன
பறவைகள் மீண்டும் வந்தன
சந்ததி முட்டையிட்ட..
சரித்திரக் கிளைகளில்
தொங்கி ஆடிக் குதூகலிக்க..
வாழ்வு தொடங்கிய வழிபாட்டு
இடத்தில்..
கற்கத் தொடங்கிய கல்விக்கூடத்தில்
மீண்டும் பார்க்க பறவைகள் வந்தன
உருவங்கள் மாறின..
உறவுகள் மாறின..
தேசங்கள் மாறின...
திசைகள் மாறின...
பெயர்கள் மாறின...
நிலைகள் மாறின...
மாறிய மாற்றங்கள் மாறிக்கொள்ள..
மாறாதிருக்கும் நட்பின் வழிதேடி..
சிறுவயது நட்பின் சிரிப்புத் தேடி..
மீண்டும் பள்ளிக்கு
பறவைகள் வந்தன...

ஊர்க்குருவிகள் உலகமெங்கும்
இருந்து ஊருக்கு வந்தன
தங்கள் பள்ளிக்கு வந்தன...
வசந்த காலப் பறவைகள்
குளங்கள் வற்றியதால்..
குண்டுகள் வீழ்ந்து..
குளங்கள் அழிந்ததால்..
தேசமெங்கும் பறந்தோம்..
திக்கெல்லாம் திசைமாறி..
தூரப் போய்.. விசை மாறி
எங்கெல்லாம் கூடுகள் கட்டிக்
குஞ்சுகள் பொரித்தோம்
பொரித்த முட்டைகள் குஞ்சுகளாகி..
பறவைகளாகி..
சிறகுகள் முளைக்க
அப்பன் அம்மை கட்டிய கூடும்
சிறந்த பூமியின் மரக்கிளை வளைவும்
சிந்திக்க ஒரு சிந்தனை பிறந்தது..

கற்களால் எறிந்த மாமரங்களும்..
கொத்தித்தின்ற மாம்பிஞ்சுகளும்..
கவலைகள் இல்லா வாழ்வின்
பொழுதும்...
கல்வியின் வாழ்வைக் கழித்த
நாள்களும்..
மேடையேறி ஆடிய பொழுதும்..
மேகக்கூட்டமாய்..மாறிய காலமும்..
மீண்டும் பார்த்திடப் பார்க்கலாம்
என்றன...
போர் தின்ற மிச்சங்கள் பார்க்க
மூன்று தசாப்தங்கள் முடிந்து
பறவைகள் வந்தன.....

போரின் துன்பமிருந்தும்
துடிப்பாய் இருந்தோம்..
மைதானங்கள் எம்மனங்கள்
படித்தன...
உடைகளில் வினோதம்..
உணவுகளைப் பகிர்ந்தோம்..
பாடவேளைகளில் பட்டாம் பூச்சிகளாய்..
பள்ளி எங்கும் வட்டமிட்டோம்
கோழிக்குஞ்சுகளாய்..
அலையென நடந்தோம்..

ஆர்ப்பரிக்கும் பூமியில்..
குண்டுகள் விழுந்தன..
கூடப் படித்தவர் மாண்டு போயினர்..
காணவில்லையென்றும்
நாம் சிலரைத் தேடினோம்..
வானக்குண்டுக்குப் பயந்து
மேசையின்கீழ் பதுங்கி..
மேகங்களாய் அழுது மழை
பொழிந்தோம்..
துன்பச் சுமைக்குள்ளும்...
இன்பமாய்ச் சிறகடித்தோம்..
வெள்ளைப் பறவைகளாய்..
கூட்டமாக வட்டமிட்டு
குதித்துத் தாவிக் குதூகலித்தோம்

மீண்டும் வந்தோம் எல்லோரும்
கட்டிக்கொண்டோம் ,கதறினோம்
அழுதோம் ,ஆர்ப்பரித்தோம்!

என் கண்கள் என் உற்ற
நண்பியைத் தேடின
இரட்டைச் சடைக்காரி
கன்னக்குழி அழகி....
வெள்ளைத் தோழி
என் பக்கத்து மேசை நண்பி
பார்க்கக் கண்குளிரும்
பசுமை பெய்யும்
பார்த்தோர் மயங்கும் தோழி!

நான் தேடாத இடமில்லை
இன்றேனும் வருவாளா?
இன்றும் வரவில்லை
தொண்டைக்குள் முள்ளாய்
அவள் நினைவு கீறி வலித்தது
உயிரை யாரோ நசித்துக் கொன்றதாய்
உணர்ந்தது...

யாருக்கும் தெரியவில்லை
எங்கெல்லாமோ அலைந்தேன்
சொந்தம் பந்தமென சுற்றமென
அயலென
எல்லாம் கேட்டு முடித்தாயிற்று
எல்லோரும் கைவிரித்தார்கள் !
முகநூலில் தேடினேன்
முகவரியில் தேடினேன்
அயலவர்கள் வரிசையாக
அனைத்தையும் தேடினேன்....
பள்ளிப்புகைப்படத்தை வைத்து
தேடி அலைந்தேன்
அவள் பிறந்த முகவரியில் தேடினேன்
வீடு வீடாக ஏறினேன் !
சைக்கிள் கடைகளில் கேட்டேன்
தொலைவிலிருந்து சைக்கிள் மிதித்து
காற்றடித்து காற்றடித்து
காத தூரம் மிதித்து வரும்
என் நண்பியைப் பார்த்தீரா? என்று.

அலைந்து தேடி ஓர் மூலையில்
அவள் தந்தையைக் கண்டேன்....
தனிமையில் வாழும் முதியவர் அழுகை
என் பள்ளி நினைவுகளை வெறுத்தன..
வாரிசுகள் இரண்டில்......
ஆண் வானக்குண்டுக்கு பலியாக
பெண் என் நண்பி .....
வகுப்புக்கு போவதாகப் போனவள்
இன்னும் வரவில்லை
காத்திருப்பதாகச் சொல்கிறார்
பார்த்துப் பார்த்து காத்திருந்து
அவள் தாயை
நோய் கொண்டு போனது
மகளைப் பார்த்துக் காத்திருப்பதாக
எங்கோ பார்த்தபடி வெறுப்புகள் சுமந்து
மனம் வலிக்க பதிலளிக்க.....

என் பட்டாப்பூச்சி நினைவுகள்
சிறகு ஒடிந்து பறந்தன...
வெறும் தரையில் உறங்கி
ஊராரிடம் யாசித்து
மகளுக்காக காத்திருக்கும்
இந்தத் தந்தைக்கு ஏன் இந்த நிலை?
வகுப்புக்கு போனவள் எங்கு மறைந்தாள்
வட்ட வட்ட எழுத்துக்களை
வரி வரிவரியாக எழுதி
பார்த்தவற்றைக் கவி வடிக்கும்
பேராற்றல் பெற்ற என் நண்பி எங்கே?

அவள் முகமும் முகவரியும்
மறக்கமுடியவில்லை
பள்ளி ஞாபகங்கள்
என் நண்பியை மட்டுமே
நினைவில் நிறுத்தும்
அவளும் நானும்
ஓடித்திரிந்த மைதானங்கள்
பாய்ந்து விளையாடிய புற்றரைகள்
ஏறிக்களித்த மேடைகளும் ஆடல்களும்
அவள் வாசித்த கவிதைகளும்
மறக்கமுடியவில்லை
தன் வாழ்வின் காணாத பொழுதுகளை
சிந்திக்காத ஓர் பட்டாம்பூச்சி
சிதைக்கப்பட்டதா?
கடத்தி வன்புணர்ந்தார்களா?
விடுதலைக்குப் போய் மடிந்தாளோ?
சரணடைந்து சாவுக்குள்
போய் ஒளிந்தாளோ?

சிறைச்சாலைகளில் தேடினேன்
விடுதலைக்காய் தொலைந்தவர் பற்றி
யாரிடம் கேட்பேன் ?
அந்த முதுமை அழுகின்ற
தந்தையை நினைக்க
உயிர்வரை நெருப்பு
எரிவதாக உணர்கிறேன்.
இரண்டு பிள்ளைகளையும்
இரைகொடுத்து
வாழ்வை வெறுத்துக் கடத்துகின்ற
தந்தையைப் பார்க்க
இந்த விடுதலைப் போராட்டமும்
அதன் நகர்வுகளும்
ஏன் எதற்காக.. என்று கத்தத்
தோன்றுகிறது!

ஓர் பள்ளிப்பறவை துள்ளிவிளையாடி
மகிழ்வாய் இருந்த திறமை மிக்க
ஒரு பெண்குழந்தை
எங்கே? எவரிடமோ வதைபட்டு
மண்ணோடு மண்ணாகியதோ?
மலக்குழிக்குள் சிக்கியதோ?
பிணந்தின்னிகளுக்கு
இரையானதோ?
நினைக்க நினைக்க நெஞ்சு முட்டி
வேகியது!

அந்த அமைதிப்பறவையின்
ஆர்ப்பரித்த கண்களும் கன்னங்களும்
இல்லாமல் போனதை நினைக்க
என்னால்
சகித்துக்கொள்ள இயலவில்லை...
அவளின் நினைவுகளை நிறைய
வைத்திருக்கும்
பள்ளிச்சூழல் எப்படி அழுதிருக்கும்?
அவள் ஆத்மா இங்குதான்
பள்ளியைச்சுற்றி
பறந்து அலைகிறதா?
அதுதான் என்னை மீண்டும்
அழைத்ததா?
இழந்த தம் பிள்ளைகளை எண்ணி
பெற்றோர் அழுவதுபோல
பள்ளிகளும் அதன் வனப்பும்
அழுதுகொண்டுதான் இருக்கின்றன...
ஆரவாரமில்லாமல்...மௌனமாக.....
கொஞ்சம் நின்று உற்றுப்பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சஞ்சீவி
19 ஒக்ரோபர் 2025

# சிறுவர் கைவண்ணம்






ற.அனாகா
தரம் - 3
ஏஞ்சல் சர்வதேச பாடசாலை



து. அபூர்னிகா
தரம் - 01
யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்



J.ஜஸ்ரினா
தரம் - 6B
கருணை இல்லம்



P.நிவேதா
தரம் - 8A
கருணை இல்லம்

# பிறரை ஏமாற்றக்கூடாது



ஒரு ஊரில் ஒரு பால்காரன் பால் விற்றுப் பிழைத்து வாழ்ந்துவந்தான். கலப்படமற்ற, சுத்தமான, தரமான பால் விற்பதில் பிரபலமான அந்தப் பால்காரனுக்கு வாடிக்கையாளர்களும் அதிகரித்துக்கொண்டே சென்றனர்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அவனுக்கு ஒரு நப்பாசை தோன்றியது. தனது இலாபத்தை இன்னும் அதிகரிக்க வழி பார்த்தான்.

முடிவாகப் பாலின் மூன்றில் ஒரு பகுதி அளவுக்குத் தண்ணீர் கலந்து விற்பனை செய்தான்.

வழக்கம்போல் சந்தைக்குச் சென்று பாலை விற்பனைசெய்தான். வாடிக்கையாளர்கள் யாரும் அவதானிக்கவில்லை. காரணம், அவர்களுக்கு இவன் மீது அவ்வளவு நம்பிக்கை.

சில நாள் கழித்து பாதியளவு தண்ணீரைக் கலக்க ஆரம்பித்தான். வாடிக்கையாளர்கள் யாரும் அவதானிக்கவில்லை. காரணம், அவர்களுக்கு அவன்மீது அவ்வளவு நம்பிக்கை.

அவன் எதிபார்த்தது போலவே இரு மடங்கு ஆதாயம் கிடைத்தது. மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். பணத்தோடு வீட்டுக்குச் செல்லும் வழியில், களைப்பாறவென ஆற்றின் எதிரே உள்ள ஒரு மரத்தின் நிழலில் சிறிது ஓய்வெடுக்க முடிவு செய்தான்.

இதற்கிடையில் ஒரு குரங்கு வந்து அவனது பணப்பையை எடுத்துச் சென்றது. கத்திக் கதறி குரங்கிடம் மன்றாடினான். பணப்பையைத் திருப்பித் தருமாறு கெஞ்சினான்.


குரங்கோ ஒரு பணத்தாளை அவனுக்கும் மறு பணத்தாளை நதியிலும் மாறி மாறி வீசி முடித்தது.

குரங்கு தன்னிடம் எறிந்த பணத்தை எண்ணிப்பார்த்தன். அங்குதான் ஆச்சரியம் அவனுக்காகக் காத்திருந்தது! கலப்படமற்ற பாலின் வருமானம் அவன் கையில் வந்து சேர்ந்திருந்தது. அப்போதுதான் அவனுக்கு தெளிவு பிறந்தது

பாலுக்கான காசு பால்காரனிடம் வந்து சேர்ந்தது, தண்ணிருக்கான காசு தண்ணீரிடம் போய்ச் சேர்ந்தது என்று.

நாம் அநியாயமாக சம்பாதித்த ஒவ்வொரு ரூபாவும் சந்தேகமின்றி ஒருநாள் ஒருசொட்டுப் பயனின்றிக் கரைந்துபோகும். .

## வழிகாட்டுவோம்







**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# பத்திரிகை





1. நாம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு ஊடகம் பத்திரிகை ஆகும்
2. பத்திரிகைகளின் மூலமாக நாட்டில் அன்றாடம் நிகழ்பவற்றை அறிந்து கொள்ளலாம்
3. பத்திரிகையில் உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள் அறிவியல் எனப் பல பிரிவுகளில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
4. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை உதயதாரகை ஆகும்.
5. பத்திரிகை வாசிப்பதால் நாம் அதிகமான விடயங்களை அறியலாம்
6. பத்திரிகைகள் தினசரிப் பத்திரிகையாகவும் வாரப் பத்திரிகையாகவும் வெளியிடப்படும்.
7. வாரத்துக்கு ஒருமுறை வெளிவரும் பத்திரிகை வாராந்தப் பத்திரிகை ஆகும்.
8. இலங்கையில் தினகரன், வீரகேசரி, தினக்குரல், உதயன் போன்றன தினமும் வெளிவரும் பத்திரிகைகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org